Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

B19

Regd. No. 2975. ஸ்ரீ:

ஸ்ரீராமாநுஜன் 181.

P. B. ANNANGARACHARYA, KANCHEEPURAM.

ஆசிரியர்: ஸ்ரீகாஞ்சீ. P. B. அண்ணங்கராசாரியர்.

வருடச் சந்தா ரூ. 5 ஜீவியச் சந்தா ரூ. 100.

ஜீவியச் சந்தாதாரர்களுக்கு பத்திரிகை சாச்வதமாக அனுப்பப்பட்டு வருவது தவிர 100 ரூபா விலையுள்ள புத்தகங்கள் உடனே அனுப்பப்படும்.

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீமதெம்பெருமானார் ஸ்ரீபர் திருவடிகளே சரணம்.

ஆழ்வார்கள் வாழி அருளிச்செயல் வாழி*
தாழ்வாது மில்குரவர் தாம்வாழி*—ஏழ்பாரு
முய்ய வவர்க ளுரைத்தவைகள் தாம் வாழி*
செய்யமறை தன்னுடனே சேர்ந்து.

சோபகிருதுஸு தைமீ 19[illegible]ம் ஜனவரீ

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீராமாநுஜன் 181.

சென்னை ஸத்க்ரந்தப்ரகாசன ஸபா மூலமாக மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை.

ஆசிரியர்: ஸ்ரீ காஞ்சி. P. B. அண்ணங்கராசாரியர்.

ஸம்புடம் 16	1964ஞ ஜனவரிமீ சோபகிருதுஞ தைமீ	ஸஞ்சிகை 1

திருவாய்மொழி நூற்றந்தாதி—70.

இன்பக் கவிபாடுவித்தோனை* இந்திரையோடு
அன்புற்றுவாழ் திருவாறன் விளையில்—*துன்பமறக்
கண்டடிமை செய்யக் கருதிய மாறன்கழலே*
திண்டிறலோர் யாவர்க்கும் தேவு.

இன்பக் கவி பாடுவித்தோனை	யோக்யமான திருவாய்மொழியைத் தம்மைக் கொண்டு பாடுவித்த எம்பெருமானை	துன்பம் அற கண்டு	தமது வருத்தம் தீரக் கண்டு
இந்திரையோடு	—பிராட்டியோடு கூட	அடிமை செய்ய கருதிய	கைங்கரியம் பண்ண ஆசைப்பட்ட
அன்புற்று வாழ்	—மகிழ்ந்து வாழுமிடமான	மாறன்	—ஆழ்வாருடைய
திருவாறன் விளையில்	திருவாறன் விளையென்னும் மலைநாட்டுத் திருப்பதியில்	கழலே	—திருவடிகளே
		திண் திறலோர் யாவர்க்கும்	திடமான அத்யவஸாயமுடையாரெல்லார்க்கும்
		தேவு	—தெய்வமாகும்.

* * ஆழ்வார் தாம் பாடின திருவாய்மொழியைக் கேட்கைக்காகப் பெரியபிராட்டியாருடனே பேரோலக்கமாகத் திருவாறன்விளையென்னும் மலைநாட்டுத் திருப்பதியில் எம்பெருமான் வந்தெழுந்தருளியிருக்கிற படியை அநுஸந்தித்து, நாம் அங்கே சென்று அச்சேர்த்தியிலே திருவாய்மொழியைக் கேட்பித்து அடிமை செய்யப் பெறுவது எப்போதோவென்று மநோரதிக்கிறபடியைக் கூறும்*இன்பம் பயக்கவென்கிற திருவாய்மொழி யென்றதாயிற்று.

எம்பெருமான் தம்மைக் கொண்டு திருவாய்மொழி பாடுவித்துக் கொண்ட பேருதவிக்குக் கைம்மாறு ஒன்றுங் காணாமே தடுமாறினார்—கீழ்த் திருவாய்மொழியாகிய* என்றைக்குமென்னையில். இப்படிப்பட்ட இவருடைய தடுமாற்றத்தை யாற்றுதற்காக எம்பெருமான், ஆழ்வீர்! நீர் ஏன் தடுமாறுகின்றீர்? நீரும் ஒன்று செய்து நெஞ்சாறல் தீர்ந்தவராம்படி பண்ண நாம் கருதியிருக்கின்றோம்; பண்டு திருவயோத்யையிலே நாம் குசலவர்கள்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

வாயாலே ஸ்ரீராமாயணம் செவிசாத்தினேமென்று கேள்விப்பட்டிருப்பீரே; அப்படியே திருவாறன்விளைத் திருப்பதியிலே திருவாய்மொழி கேட்பதாகப் பாரித்திருக்கின்றோம்; ஆனால் ஸ்ரீராமாயணம் கேட்டபோது நாம் பிராட்டியைப் பிரிந்திருந்தோமாதலால் தனியே யிருந்து கேட்டோமென்று ஒரு குறையுண்டு. இப்போது அப்படியன்றிக்கே நாமும் நம் பெண்டுகளுமாயிருந்து கேட்க அறுதியிட்டிருக்கின்றோம்; நீர் அங்கே வந்து திருவாய்மொழி கேட்பித்து ஒருவாறு நெஞ்சாறல் தீரப் பெறலாமே யென்று பணிக்க, அது கேட்ட ஆழ்வார், என்னைக் கொண்டு திருவாய்மொழி பாடுவித்துக் கொண்ட உபகாரத்தளவோடு நில்லாமல் அது கேட்கவும் பாரியா நின்றானே! இது என்ன மஹோபகாரம்! என்று உவகை தலைமண்டை கொண்டு அந்தத் திருவாறன்விளைத் திருப்பதியிற் சென்று திருவாய்மொழி கேட்பித்தலாகிற கைங்கர்யத்தைச் செய்யப் பாரிக்கிறார் *இன்பம் பயக்கவென்னும் இத்திருவாய் மொழியினாலே. .... (70.)

ஸம்வத்ஸராரம்ப விஜ்ஞாபனம்.

ஸ்ரீராமாநுஜன் பதினைந்து பிராயங்களை இடையூறொன்றுமின்றியே கடந்து இப்போது பதினாறுவது பிராயத்தில் அடியிட்டாயிற்று. எல்லாவற்றுக்கும் பகவத் க்ருபையே மூலகாரண மென்றிருந்தாலும் அந்த பகவான் தன்னுடைய க்ருபையை நேர்முகமாகக் காட்டாமல் பாகவதர்களின் மூலமாகவே காட்டு மியல்வினனாதலால் பாகவதர்களின் க்ருபையையே நாம் முக்கியமாகப் போற்றவேண்டியதாகிறது. இதற்குச் சந்தாப் பணம் செலுத்தி அநுக்ரஹிப்பதைவிட, "ஸம்ஷேந நவா யஜ்ஞாதிஷு சுபேந மநஸா த்யாதம்" என்ற கணக்கிலே ஹ்ருதய பரிபூர்ணமான ப்ரேமத்துடனே இதற்கு மங்களா சாஸனம் செய்வதுண்டே, அதுதான் மிகச் சிறந்தது. ஸ்ரீராமாநுஜனை வெகு ஆவலோடு எதிர்பார்த்திருப்பதும், கிடைத்தவுடனே பூர்த்தியாக வாசித்து முடித்தே மறுகாரியம் பார்ப்பதுமாயிருக்கிற மஹான்கள் பலருளரென்பதை அவரவர்களின் ஸ்ரீமுகங்களினா லறிந்து மகிழ்கிறோம். அன்னவர்களின் த்ருப்தியையும் அதன் பரீவாஹமான மங்களா சாஸனத்தையுமே ஸ்ரீராமாநுஜனுக்கு தாரகபோஷகபோக்யங்களாகக் கருதுகின்றோம்.

சென்னை டாக்டர் ஸ்ரீ. V. ராமையங்காரவர்கள் 16—1—64ல் எழுதிய கடிதத்தில் "நம் ஸம்பிரதாயத்திற்கு ஸ்ரீராமாநுஜன் செய்யும் ஸேவை ஒப்பற்றது. "வர்த்ததாம் அபிவர்த்ததாம்" என்று இதற்குப் பல்லாண்டு பாட உலகமெல்லாம் கடமைப்பட்டிருக்கின்றது. இது ஆஸ்திகர்களெல்லாருடையவும் கோரிக்கை. எனது தனிப் பிரார்த்தனையுமாகும். ஒவ்வொரு விஷயத்திலும் ஸ்ரீராமாநுஜனில் காணும் விளக்கமும் திருத்தமும் ஸ்வாமியைத் தவிர வேறு யாரால் செய்யமுடியும்? ஸ்ரீராமாநுஜனுக்கு என்னுள்ளத்தில் தனியிடமுள்ளதென்பதை விஜ்ஞாபித்து நிற்கிறேன்." என்றுள்ள பொன்மொழிகளை இங்கு நம் ஆப்தர்களுக்கு உபஹாரமாக ஸமர்ப்பிக்கிறேன். ... . (*)

க்ருதஜ்ஞதாநுஸந்தானம்.

ஸ்ரீமான் உ. வே. டாக்டர். V. ராமையங்கார் (சென்னை) அவர்களும், ஸ்ரீமான் உ. வே. P. B. அனந்தாசாரியர் ஸ்வாமி (Advocate) சென்னை. அவர்களும் நமது ஸ்ரீராமாநுஜனுக்கு ஜீவிய சந்தாதாரர்களாகச் சேர்ந்து பேருதவி புரிந்ததற்கு மிக நன்றி.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீராமாநுஜன் சந்தா செலுத்தியவர்கள் :—

1. ஸ்ரீமான் உ. வே. ஆசால் சேஷாசாரியர் ஸ்வாமி, அட்வகேட் Madras 5
2. ,, R. V. Seshadri Iyengar Advocate Madras-8.
3. ,, M. R. Seshadri Iyengar Mannadi, Madras-1.
4. ,, G. Srinivasacarya,r Caltex, ,,
5. ,, A. Srinivasachari, Teacher, Madras-33.
6. ,, K. S. Krishnaswami Iyengar, Madras-5.
7. Sriman N. Lakshmi Narasu Naidu, ,,
8. ஸ்ரீமதி ரங்கம் ஜானகியம்மாள், ஆழ்வார்திருநகரி
9. ஸ்ரீமான் பு. கொ. மாசி செட்டியார், குன்றத்தூர் புதூர்
10. ,, தேவகோட்டை ஸௌந்தரராஜய்யங்கார்; Vakil's Clerk.
11. ,, திருவேங்கடமையங்கார், Advocate, Devakottai.
12. ,, V. கேசவுலு நாயுடு, ஸ்ரீதரன் ஆத்தூர்
13. ,, A. வெங்கடஸாமி நாயுடு, மிராசுதாரர், பந்தல்குடி
14. ஸ்ரீமதுபயவே. R. ஜகன்னுதய்யங்கார், பாண்டிச்சேரி
15. ,, T. N. கிருஷ்ணய்யங்கார், Asst. B. H. School, வள்ளியூர்
16. ,, K. Krishnamachariar, Chik-Ballapur (Mysore).
17. ,, R. Varadarajayyangar, Asoka Road, New Delhi.
18. ,, விரக்தி ஸ்ரீநிவாஸாசாரியர், Pandit, முஸரவாக்கம் (காஞ்சீ.)
19. ,, D. Srinivasa Iyengar, Advocate, Paramagudi.
20. ,, N. R. Raghavasami Iyengar. ,, ,,
21. ,, Narayana Iyengar, Headman, ,,
22. ,, S. Srinivasa Iyengrr, Retd., Head Clerk, Union Office, ,,
23. Sri Needa Kesavaraman, ,,
24. ஸ்ரீமான் O. K. S. குப்புஸாமி கண்ணதாஸி, மதுரை.
25. ஸ்ரீமதி. ஸரோஜினியம்மா, பெங்களுர்–4.

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி. திருக்குடந்தை யாண்டவன்.

திருவரங்கம் பெரியகோயிலில் ஆண்டவன் ஆஸ்தானம் ஸுப்ரஸித்தமானது. அங்கு வடதிருக் காவிரிக்கரையிலுள்ள பெரிய ஆச்ரமம் ஆண்டவனுச்ரமமென்று வழங்கப்பட்டு வருகிறது. முதன் முதலாகத் தேரழுந்தூராண்டவன் என்று ப்ரஸித்தரான ஸ்வாமியை அடியேன் நன்கு அறிவேன். அந்த ஸ்வாமி காஞ்சீபுரியில் பல ஸம்வத்ஸரங்கள் எழுந்தருளி யிருந்து பகவத் விஷய கூலக்ஷேபம் செய்துகொண்டிருந்து காஞ்சியிலேயே திருநாடலங்கரித் தார். அந்த ஸ்வாமிக்குப் பிறகு ஆக்கூராண்டவன் ஆஸ்தானத்தை அலங்கரித்திருந்தார். இந்த ஸ்வாமி பூர்வாச்ரமத்தில் ஆக்கூர் ரங்கஸ்வாமி ஐயங்காரென்று ப்ரஸித்தராய் சோளஸிம்ஹபுரத்தில் சில ஸம்வத்ஸரங்க ளெழுந்தருளி யிருந்து ஸாஹித்யாதி கூலக்ஷேபம் செய்துகொண்டிருந்து பிறகு காஞ்சியிலேயே ஸ்திரவாஸமாக வந்து சேர்ந்து. தேவப் பெருமாள் ஸன்னிதி வீதியிலுள்ள திருவடி ஸன்னிதியில் சில ஸம்வத்ஸரங்கள் ஸ்ரீராமாயண

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸந்ந்யாஸம் செய்து, தேரழுந்தூராண்டவன் ஸ்ரீபாதத்திலேயே ஸம்ப்ரதாய ரஹஸ்ய க்ரந்தங்களை யதிகரித்து அவ்வருடைய ஸ்தானத்தில் அபிஷிக்தராகி கோயிலிலேயே நித்யவாஸ நிரதரா யெழுந்தருளியிருந்து அவ்விடத்திலேயே திருநாடலங்கரித்தார்.

அந்த ஸ்வாமிக்குப் பிறகு தென்பரை யாண்டவனென்கிற ஸ்வாமி ஆஸ்தானமலங்கரித்து, பத்து வருஷங்களுக்கு மேலாக வெழுந்தருளியிருந்து சென்ற பங்குனித் திங்களில் கோயிலிலேயே திருநாடலங்கரித்தார். அந்த ஸ்வாமியும் திருமேனி பாடவக் குறைவினால் திவ்யதேச யாத்திரை செய்தருளாமலே யிருந்தார். அந்த ஸ்வாமியின் ஆஸ்தானத்தை இப்போது அலங்கரித்தருள்பவர் திருக்குடந்தை யாண்டவன். இந்த ஸ்வாமி பூர்வாச்ரமத்தில் திருக்குடந்தை கண்ணன் ஸ்வாமி என்று ப்ரஸித்தரானவர். இந்த ஸ்வாமியின் பாண்டித்யப் பெருமையையும் உபந்யாஸத் திறமையையும் அறியாதாரில்லை. பல வருஷங்களாக சென்னையில் எழுந்தருளியிருந்து அங்குப் பலவிடங்களிலும் உபந்யாஸங்கள் செய்துகொண் டெழுந்தருளியிருந்தார். டில்லி முதலான வெளிநகரங்களிலும் ஸ்வாமியை எழுந்தருளச் செய்து ஆங்காங்குள்ள பெரியார்கள் ஏராளமான உபந்யாஸங்களை நடத்திவைத்து ஆனந்தித்திருக்கிறார்கள்.

ஸ்வாமியின் வித்யார்த்தி தசையி லிருந்தே அடியேனுக்கு அதிக பரிசயம் ஏற்பட்டிருந்தது. ஸ்வாமியின் திருத்தகப்பனார் ஸ்ரீ. உ. வே. பத்மநாபையங்கார் ஸ்வாமியும் அடியேனுக்குப் பரமாப்தராக எழுந்தருளியிருந்தார். அர்ஜுநன் ஸ்ரீக்ருஷ்ண பகவானுடைய விச்வரூபம் கண்ட பின்பு "ஸகேதி மத்வா ப்ரஸபம் யதுக்தம் ஹே க்ருஷ்ண ஹே யாதவ ஹே ஸகேதி.........யச்சாவஹாஸார்த்த மஸத்க்ருதோஸி விஹாரசய்யாஸந போஜநேஷு ।" என்று சொன்னதிலிருந்து அவ்விருவர்க்கும் எவ்விதமான பரிமாற்ற மிருந்ததாக அறிகிறோமோ அவ்விதமான பரிமாற்ற மிருந்ததென்று சுருங்கச் சொல்லி நிற்கிறேன். அதைப்பற்றித் தனிப் புத்தக மெழுதவேண்டும்.

ஸ்வாமி ஏழெட்டு மாதங்களுக்கு மேலாகவே கோயிலை விட்டு யாத்திரையாகப் புறப்பட்டு ஸ்ரீமுஷ்ணணை சேற்று வைகுண்ட ஏகாதசியன்று ஸ்ரீகாஞ்சி யெழுந்தருளிப் பேரருளாளனை மங்களாசாஸனஞ் செய்தருளி இவ்விடமே ஸ்ரீரங்கராஜ வீதியிலுள்ள ஆச்ரமத்தில் நித்ய க்ரந்த காலக்ஷேபாதி வைபவங்களுடன் எழுந்தருளி யிருப்பது காஞ்சி வாஸிகளின் பாக்யம். சித்திரை பிறந்தபின்பு இங்கு நின்றும் திருமலை யாத்திரையாகப் புறப்பட்டெழுந்தருளக் கூடுமென்று தெரிகிறது.

ஸ்வாமி இந்த யாத்திரையை பாதசாரத்தினாலேயே நடத்தியருள்வது குறிப்பிடத்தக்கது. ஸம்பதி விரக்தி:, ஆபதி விரக்தி: என்று சிலர் விஷயத்தில் சொல்லுவதுண்டு. அங்ஙனன்றிக்கே ஸகல ஸௌகர்யங்களும் குறைவற்றிருந்தும் இங்ஙனே ஆசரிப்பது அநுகரிக்கத்தக்கதும் அநுகரிக்க அரியதுமாகும்.

வர்த்தமான காலத்தில் ஆங்காங்கு மடாதிபதிகளாக ஸேவை ஸாதிக்கின்ற ஸ்வாமிகள் போலவே இந்த ஸ்வாமியும் சிறந்த வித்வத் ஸார்வ பௌமராகவும் லௌகிக வைதிகங்களில் பரம சதுரராகவும் விளங்குவதும் மிக உதாரமான திருவுள்ளத்தோடு கூடியிருப்பதும் போற்றத்தக்கது. உ. வே. சித்ரகூடம் விஜயராகவாசார்யருடைய ஸஹயோகத்தினால் ஆஸ்தானம் விசேஷத: பரிமளிக்கிறது. .... (*)

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீ:

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

திருப்பாவை — வித்வத் ஸதஸ்ஸு.

— திருப்பாவை ராமாயணம் —

சிலவாண்டுகளாக மார்கழி மாதந்தோறும் சென்னை மாநகரில் பல பேட்டைகளிலும் திருப்பாவை காலக்ஷேபரூபமாகவும் உபந்யாஸ ரூபமாகவும் பல பண்டிதர்களால் நடத்தப்பட்டு வருவது ப்ரஸித்தமே. ஒரு ஞாயிற்றுக்கிழமையில் அப்பண்டிதர்களையெல்லாம் ஒன்று சேர்த்துச் சில கனவான்களால் திருப்பாவை வித்வத் ஸதஸ்ஸென்னும் பெயரால் ஒரு பெரிய ஹாலில் ஸபையொன்று கூட்டப்பட்டு அப்பண்டிதர்களெல்லாரும் அங்கு வரவழைக்கப்படுகிறார்கள். ஒவ்வொருவர்க்கும் சில நிமிஷங்கள் மட்டும் அவகாசமளித்து ஒவ்வொரு பாசுரத்தின் துணுக்கையெடுத்துக்கொண்டு ஸ்வல்பம் பேசும்படி செய்வது இந்த ஸதஸ்ஸின் வழக்கம். இவ்வாண்டிலும் இந்த பண்டித ஸதஸ்ஸு 12—1—1964 ஞாயிற்றுக்கிழமையன்று தியாகராயநகரில் சாரதா வித்யாலய ஹாலில் கூடிற்று. பொறுப்பாளிகளின் ஆஹ்வானத்தின்மேல் முப்பது பண்டிதர்கள் ஸதஸ்ஸை அலங்கரித்தார்கள். இருவர் அல்லது மூவர் தாங்கள் நேரில் வரமுடியாமல் ப்ரதிநிதிகளையனுப்பியதாகத் தெரியவந்தது. ஸதஸ்ஸின் ஸ்தலம் மிகவும் விசாலமானபடியால் பரிகணநீயமான திரள் கூடியிருந்து அநுபவித்தது.

ஸதஸ்ஸின் ப்ரகடன பத்திரிகையில் "திருப்பாவை ராமாயணம்" என்று மகுடம் சாற்றப்பட்டிருந்தது. திருப்பாவையின் பாசுரத் துணுக்கையெடுத்துக்கொண்டு உபந்யஸிக்கும் பண்டிதர்களனைவரும் அந்தத் துணுக்கையில் ஸ்ரீராமாயண கதையையே அநுபவிக்க வேணுமென்று நிபந்தனை செய்யப்பட்டிருந்தபடியால் அதற்குச் சேர அங்ஙனே மகுடம் இடப்பட்டதாம்.

திருவாய்ப்பாடிப் பிரானான ஸ்ரீ க்ருஷ்ண பகவானையே இலக்காகக் கொண்டு அவதரித்த திருப்பாவையில், 4. தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல். 10. கும்பகரணனும் தோற்று முனக்கே பெருந்துயில்தான் தந்தானோ? 12. சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற. 13. பொல்லா வரக்கனைக் கிள்ளிக் களைந்தானை. 24. சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய். என்றித்தகைய சில பாசுரத் துணுக்குகளைக் கொண்டு ராமாவதாரத்தை யநுபவிக்க முடியுமெனினும் ஸ்ரீராம கதா ப்ரஸ்தாவ கந்தமேயில்லாத மற்றைப் பாசுரங்களிலிருந்து அவ்வநுபவம் எங்ஙனே செய்ய முடியும்? என்று சிலர் நினைக்கக்கூடும். இது அஸம்பாவிதமன்று; பல வழிகளால் ஸம்பாவிதமேயாகும். மாககவி இயற்றிய சிசுபால வத மஹா காவ்யத்தில் நான்காவது ஸர்க்கத்தில் ரைவதக பர்வத வர்ணனம் அற்புதமாகச் செய்யப்பட்டுள்ளது. அதில் 59-ஆம் சுலோகம்:—

"एतस्मिन्नधिकपयःश्रियं वहन्त्यः संक्षोभं पवनभुवा जवेन नीताः ।
वाल्मीकेररहितरामलक्ष्मणानां साधर्म्यं दधति गिरां महासरस्यः ॥

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஏதஸ்மிந் அதிகபய: ச்ரியம் வஹந்த்ய: ஸம்க்ஷோபம் பவநபுவா ஜவேந நீதா:,
வால்மீகே: ஆரஹித ராமலக்ஷ்மணாம் ஸாதர்ம்யம் தததி கிராம் மஹா ஸரஸ்ய:”
என்பது. இது தன்னில் ஸைவதகபர்வதத்திலுள்ள பெரிய தடாகங்களை ஸ்ரீராமாயணத்தோடு ஒப்பிட்டுப் பேசியுள்ளார் மஹாகவியானவர் தம்முடைய ஸாமர்த்திய விசேஷத்தினால். இதைச் சிறிது விவரிப்போம். एतस्मिन् — (ஏதஸ்மிந்) — இந்த ஸைவதக மலையிலே, மஹா ஸரஸ்ய:—பெரிய தடாகங்களானவை, வால்மீகே: கிராம் ஸாதர்ம்யம் தததி—வால்மீகி முனிவரின் திருவாக்கான ஸ்ரீராமாயணத்தின் ஸாம்யத்தைத் தாங்குகின்றன; ஸ்ரீராமாயண ஸத்ருசங்களாயிருக்கின்றன வென்றபடி. எங்ஙனே யென்னில்; மூன்று அம்சங்களினால் ஸாம்யம் நிர்வஹிக்கப்படுகின்றது. 1. [அதிக பய: ச்ரியம் வஹந்த்ய:] தடாகங்களானவை அதிகமான தீர்த்தங்களின் ஸம்ருத்தியை வஹிக்கின்றன. வால்மீகி வாக்குக்களோ வென்னில்; [அதி - கபய:, ச்ரியம் வஹந்த்ய:] என்று பிரித்துக் கொள்வது. அதிகமான வானரங்களை யுடையனவாயும், ஸ்ரீ மஹாலக்ஷ்மியான ஸீதாபிராட்டியை வஹிப்பனவாயுமிருக்கும். வானர முதலிகளின் கதையையும் பிராட்டியின் கதையையும் அதிகமாகக் கொண்டதன்றோ ஸ்ரீராமாயணம். இது ஸபங்கச்லேஷமெனப்படும். இன்னமும்; [பவநபுவா ஜவேந ஸம்க்ஷோபம் நீதா:] பவநமாவது வாயு; காற்று. அதனாலுண்டான வேகத்தாலே தடாகங்கள் க்ஷோபத்தை யடைவிக்கப்படுவது இயல்பு. தாமரை யிலைகள் கிழிக்கப்படுவதும் தாமரை மலர்கள் சிதறவடிக்கப்படுவதும் காற்றின் கோலாஹலமாக நிகழுமன்றோ. இனி ஸ்ரீராமாயண பக்ஷத்தில் [ஜவேந பவநபுவா ஸம்க்ஷோபம் நீதா:] “ஜவோ வேகேச வேகிநி” என்கிற நிகண்டுவின்படி ஜவமென்பதற்கு வேகமும் வேகசாலியும் பொருளாகையால் வேகசாலியான ஹநுமானாலே இலங்கை ஸம்க்ஷோபமடைந்த கதையைச் சொன்னது ஸ்ரீராமாயண மென்றபடி. “ஓதமா கடலைக் கடந்தேறி உயர்கொள் மாக்கடி காவை யிறுத்துக் காதல் மக்களும் சுற்றமுங் கொன்று கடியிலங்கை மலங்க வெரித்துத் துதுவந்த குரங்கு” என்கிற பெரிய திருமொழிப் பாசுரமும், “முன்போலா விராவணன் தன் முது மதிளிலங்கை வேவித்த அம்பினானுமன் வந்து” என்கிற திருக்குறுந்தாண்டகப் பாசுரமும் இங்கு நினைக்கத்தக்கன. பவநபுவா என்றது — பவநாத்மஜேந (மாருதிநா) என்றபடி. இன்னமும்; [ஆரஹித ராம லக்ஷ்மணாம்] ஸ்ரீராமாயணத்தில் ராம லக்ஷ்மணர்கள் இணை பிரியாதிருப்பர்கள். தடாகங்களிலோ வென்னில்; ஸாரஸ பக்ஷிகளின் தம்பதிகள் இணை பிரியாதிருக்கும். ராம: என்று ஆண் ஸாரஸ பக்ஷிக்கும், லக்ஷ்மணா என்று பெண் ஸாரஸ பக்ஷிக்கும் நிகண்டு ஸித்தமான பெயர்.

இவ்வனம் தடாகத்திற்கும் ஸ்ரீராமாயணத்திற்கும் ஸாம்யம் கூறப்பட்டிருப்பதானது ச்லேஷாலங்கார ஸம்மிச்ரிதமானது. இது கவிதானே விரும்பிச் செய்ததாகும். ஆண்டாள் தன்னுடைய பாசுரங்களில் இங்ஙனே சிலேடையை அமைத்திருக்கவில்லை. உள்ள சொல் தொடைகளை நோக்கி வக்தாக்கள் ஸமர்த்தப்படுத்திக் காட்டலா மத்தனை. ஸதஸ்ஸில் உபஸ்திதர்களான பண்டிதர்களுக்குப் பர்யாப்தமான அவகாசமளிக்கப் பட்டிருந்தால் அவரவர்கள் தம் தம் விவக்ஷிதங்களை விவரித்துரைக்க ஸௌகர்ய மிருந்திருக்கும்.

ஸதஸ்ஸின் நிர்வாஹகர்கள் அடியேனுக்கு *வங்கக் கடல் கடைந்த பாசுரத்தைக் கொடுத்து, இதில் செல்வத் திருமாலால் இன்புறுவர் என்றதைக் கொண்டு ஸ்ரீராம பட்டாபிஷேகத்தை நடத்தித் தலைக்கட்டுமாறு நியமித்திருந்தபடியாலும், மேல் வக்தாக்களில்லாமையாலே அவகாச நிர்ப்பந்த மில்லாமலிருந்த படியாலும் அந்தப் பாசுரத்திலிருந்து ஸ்ரீராமா

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

யண கதா பாகங்களைப் பெரும்பாலும் அநுபவிக்க வாய்ப்பு இருந்தது. அங்கு அநுபவித்த படியைப் பலருமறிய இங்கு ஸாரமாக விஜ்ஞாபிக்கிறேன் சில ஸஹ்ருதய ஸுஹ்ருந் மணிகளின் நியமனத்தை யநுஸரித்து. முந்தின இருபத்தொன்பதாம் பாசுரத்திற்கு உபந்யாஸகராக நியமிக்கப்பட்டிருந்த பண்டிதர் உபஸ்திதராகாமையினாலே அவர் பணியையும் அடியேன் செய்ய நேர்ந்தது. அவர் அந்தப் பாசுரத்திலிருந்து தாம் உபந்யஸிக்க விரும்பியிருந்த துணுக்கையை உற்றோம் என்று குறிப்பிட்டிருந்தார். *சிற்றஞ் சிறுகாலைப் பாசுரத்தில் "உன்றன்னோடு உற்றோமே யாவோம்" என்ற பகுதி அப்பண்டிதர்க்கு விவக்ஷிதமாயிருந்தபடியால் அதிலுள்ள உற்றோமென்பதைச் சிறிது விவரிக்க ஆரப்தமாயிற்று.

உற்றோமாவோமென்பதற்கு அவிநாபூதரா யிருப்போமென்பது தாத்பர்யம். ஸ்ரீராமாயணத்தில் [உத்தர ஸ்ரீராமாயண முட்பட] பெருமாளும் பிராட்டியும் பலகாலம் பிரிந்திருந்ததாகக் கதை தெரியவந்தாலும், பிராட்டியின் திருவாக்காலும் பெருமாளுடைய திருவாக்காலும் பிரிவென்பது அடியோடு இசையப்படவில்லை. "अनन्या राघवेणाहं भास्करेण प्रभा यथा — அநந்யா ராகவேணாஹம் பாஸ்கரேண ப்ரபா யதா" என்பது பிராட்டியின் திருவாக்கு. பாஸ்கரனான ஸூர்யன் ஆகாசத்தில் பலயோஜனை தூரத்திலிருந்தாலும் அவனுடைய பிரபையானது நம்மில்லத்தளவும் புகுந்து பரந்திருக்கக் காணுகின்றோம். இதனால் ஸூர்யனுக்கும் பிரபைக்கும் விச்லேஷமுண்டாய் விட்டதாக யாரும் நினைப்பதில்லை. இந்த த்ருஷ்டாந்தத்தைப் பிராட்டி கூறியதனால் திவ்ய தம்பதிகளின் அவிநாபாவம் ஸ்பஷ்ட ஸித்தமாயிற்று. இங்ஙனே பிராட்டி கூறினது பெருமாளுக்குத் தெரியாமலிருக்கச் செய்தேயும், அவருடைய திருவாக்கிலும் இவ்வர்த்தமே வெளிவந்தது "अनन्या हि मया सीता भास्करेण प्रभा यथा — அநந்யா ஹி மயா ஸீதா பாஸ்கரேண ப்ரபா யதா." என்றார். பிராட்டியின் வாக்கினால் தனக்கும் பெருமாளுக்கும் அவிநாபாவம் ஸாதிக்கப்பட்டது; பெருமாள் வாக்கினால் தனக்கும் பிராட்டிக்கும் அவிநாபாவம் ஸாதிக்கப்பட்டது என்னுமிவ்வளவே வாசி. த்ருஷ்டாந்த ப்ரதர்சநத்தில் எள்ளளவும் வாசியில்லை. "பாஸ்கரேண ப்ரபா யதா" என்கிற த்ருஷ்டாந்தம் இருவர் திருவாக்கிலும் அவிசேஷமாக வந்துள்ளது. இதைக் கொண்டே "जयत्याश्रितसंत्रासध्वान्तविध्वंसनोदयः । प्रभावान् सीतया देव्या परमव्योम भास्करः — ஜயத்யாச்ரித ஸம் த்ராஸ த்வாந்த வித்வம்ஸ நோதய:, ப்ரபாவாந் ஸீதயா தேவ்யா பரம வ்யோம பாஸ்கர:" என்று ரகுவீர கத்ய மங்கள ச்லோகம் அவதரித்ததாயிற்று. *உன்றன்னோடுற்றோமே யாவோமென்று ஆய்ச்சிகள் பாரித்ததும் பெற்றதும் இத்தகைய அவிநாபாவமேயாம்.

இனி, வங்கக்கடல் கடைந்த ராமாயணம்.

நாச்சியார் திருமொழியில் கடல் கடைந்த விருத்தாந்தத்தைப் பேசுகின்ற ஆண்டாள் ஸமுத்ர மதனமென்கிற அவ்வரிய பெரிய செயலை எம்பெருமான் செய்தது தேவர்களுக்கு அமுதமளிக்க வென்னும் வியாஜத்தினால் பெரியபிராட்டியாரைத் தான் பெறுவதற்காகவே யென்று காட்டுகின்றாள் "மந்தரம் நாட்டியன்று மதுரக் கொழுஞ்சாறு கொண்ட சுந்தரத் தோளுடையான்" என்னும் பாசுரத்தினால். தேவர்களுக்குக் கொடுத்த உப்புச் சாற்றை வ்யாவர்த்திப்பிக்கைக்காக 'மதுரக் கொழுஞ்சாறு' என்றாள். பிராட்டியேதான் மதுரக் கொழுஞ்சாறாகக் கருதப்பட்டாள். அது அடுத்துள்ள கொண்ட என்னும் பெயரெச்சத்தினாலும் விளக்கப்பட்டது.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

கொடுத்தது உப்புச் சாறு; கொண்டது அமுதக் கொழுஞ்சாறு. இதுதன்னைக் கூரத்தாழ்வான் ஸுந்தரபாஹு ஸ்தவத்தில் "उदधिग मन्दराद्रिमथिमन्थनलब्धपयोमधुररसे-न्दिरामधुप सुन्दरदोःपरिघम्—உததிக மந்தராத்ரி மதிமந்தந லப்த பயோமதுரரஸேந்திரா மதுப ஸுந்தரதோ: பரிகம்" என்பதனால் நன்கு வியாக்கியானித்தருளினர். "விண்ணவர் அமுதுண அமுதில் வரும் பெண்ணமுது உண்ட எம்பெருமானே!" என்றார் திருமங்கை யாழ்வாரும். ஆக, கடல் கடைகையாகிற அரும் பெருந் தொழில் செய்து பெரியபிராட்டியாரைப் பெற்றதுபோல, வேறொருவர்க்கும் எடுக்கவொண்ணாத வில்லை அவலீலையாக வெடுத்து வளைத்து அருந்தொழில் செய்தது ஸீதாபிராட்டியைப் பெறுதற்காதலால், வங்கக் கடல் கடைந்து — அருமையான காரியத்தைச் செய்து, மாதவன் — ஸீதாபதியாயினனென்றதாகக் கொள்க. मया धवः—माधवः; मैथिलीप्राणनाथ इत्यर्थः। ஆகவித்தால் ஸீதா விவாஹ வட்டம் சொல்லிற்றாயிற்று. ரூபகாதிசயோக்தி யலங்காரமிது.

மேலே கேசவனென்றதனால் பரசுராம பங்க கதை ஸூசிதமாகிறது. எங்ஙனே யென்னில்; கேசவ நாமமானது பரமசிவனால் பகவானுக்கு அர்த்த விவரண பூர்வகமாக அளிக்கப்பட்டது. பிரமனுக்கும் சிவனுக்கும் மேற்பட்டவனென்பது விவரண ஸித்தமான பொருள். பரசுராம பங்கத்தினால் பெருமாளுக்கு ஸித்தித்தது அப்ரமேயமான பரத்வமேயாதலால் அது கேசவனை யென்பதனால் ஸூசிதமென்னக் குறையில்லை.

மேலே "திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி" என்பதனால் மேலுள்ள பல காண்டங்களின் கதை ஸூசனையாக வன்றிக்கே வ்யக்தமாகவே தெரிவிக்கப்படுகிறது. எங்ஙனே யென்னில்; சேயிழையார் என்று ஸ்த்ரீகளுக்குப் பெயர். செவ்விய இழைகளை — ஆபரணங்களை யணிந்துள்ளவர்களென்று காரணப் பெயர், புமான்கள் ஆபரணங்களை யணிந்திருந்தாலும் அவர்களைச் சேயிழையார் என்பதில்லை. ஆக ஸ்த்ரீகளின் மங்களாசாஸனமும் புகழுரையும் சேயிழையா ரிறைஞ்சி யென்பதனால் சொல்லப்பட்டதாகிறது. ஸ்ரீராமாயணத்தில் இராமபிரானுக்குக் கிடைத்த மங்களாசாஸனங்களும் புகழுரைகளுமெல்லாம் பெரும்பாலும் ஸ்த்ரீகள் மூலமாகவே யென்பதை மூதலிப்போம்.

(1) பெருமாளுக்கு யுவராஜ பட்டாபிஷேகம் செய்வதாகக் கோலினவளவிலே "स्त्रियो वृद्धास्तरुण्यश्च सायंप्रातस्समाहिताः। सर्वान् देवान्नमस्यन्ति रामस्यार्थे यशस्विनः—ஸ்த்ரியோ வ்ருத்தாஸ் தருண்யச் ச ஸாயம் ப்ராதஸ் ஸமாஹிதா:, ஸர்வாந்தேவாந் நமஸ்யந்தி ராமஸ்யார்த்தே யசஸ்விந:." [அயோ. 2–53] என்று கிழவிகளும் யுவதிகளுமான ஸ்த்ரீகளே மங்களாசாஸனம் செய்ததாகச் சொல்லிற்று. (2) "पतिसम्मानिता सीता भर्तारमसितेक्षणा। आद्वारमनुवव्राज मङ्गलान्यभिदध्युषी—பதிஸம்மாநிதா ஸீதா பர்த்தாரமஸிதேக்ஷணா, ஆத்வாரமநுவவ்ராஜ மங்களாநி அபிதத்யுஷீ" (அயோ. 16–21.) என்று அடுத்தபடியாக ஸீதாபிராட்டி மங்களாசாஸனம் செய்தபடி சொல்லிற்று. (3.) "यन्मङ्गलं सुपर्णस्य विनताऽकल्पयत्पुरा। अमृतं प्रार्थयानस्य तत्ते भवतु मङ्गलम्—யந்மங்களம் ஸுபர்ணஸ்ய விநதா அகல்பயத் புரா, அம்ருதம் ப்ரார்த்தயாநஸ்ய தத்தே பவது மங்களம்." என்று அடுத்தபடியாகக் கௌஸல்யாதேவி மங்களாசாஸனம் செய்தபடி சொல்லிற்று. (4) இதற்கடுத்தபடியாக ஆரண்ய காண்ட உபக்ரமத்தில் மஹர்ஷிகள் மங்களாசாஸனம் செய்தபடி சொல்லுகிறது. இவர்கள் ஆண்களே யொழியச் சேயிழையாரல்லரே யென்று நினைக்கக்கூடும். இங்கு ஒரு மருமம் உணர்த்த விரும்புகிறேன். "ते तं सोममिवोद्यन्त

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

दृष्ट्वा वै धर्मचारिणः । मङ्गलानि प्रयुञ्जानाः— தே தம் ஸோம மிவோத் யந்தம் த்ருஷ்ட்வா வை தர்ம சாரிண:, மங்களானி ப்ரயுஞ்ஜாநா:" என்னப்பட்ட தண்டகாரண்ய வாஸிகளான மஹர்ஷிகள் அடுத்த ச்லோகத்தில் "रूपसंहननं लक्ष्मीं सौकुमार्यं सुवेषताम् । ददृशुर्विस्मिताकाराः—ரூபஸம்ஹநநம் லக்ஷ்மீம் ஸௌகுமார்யம் ஸுவேஷதாம், தத்ருசுர் விஸ்மிதாகாரா:', என்னப்பட்டார்கள் வால்மீகி மஹர்ஷியினால். இங்கு விஸ்மிதாகாரா: என்ற ஸ்தானத்தில் விஸ்ம்ருதாகாரா: என்ற பாடமும் பல ஸ்ரீகோசங்களிற் காண்கிறது. அந்த மஹர்ஷிகள் தங்களுடைய ஆண்மையை மறந்து பெண்மையை ஏறிட்டுக் கொண்டதாகப் பொருள்படுகின்றது. "ஆடவர் பெண்மையை அவாவுந் தோளினாய்!" என்ற கம்பர் வாக்குக்கு இது மிகப் பொருந்தும். பாண்டவர்களின் அஜ்ஞாத வாஸ காலத்தில் விராட நகரத்தில் த்ரௌபதியைக் கண்ட பெண்மணிகளெல்லாம் "பும்பாவம் மனஸா யயு:" என்னும்படி ஆண்மையை ஆவாஹனம் செய்துகொண்டதுபோல, இராமபிரானுடைய வடிவழகில் ஈடுபட்ட ஆரண்ய மஹர்ஷிகள் மனஸா பெண்மையை பெய்தினதாகவும், அவர்களே க்ருஷ்ணாவதாரத்தில் கோபிகளாக வந்து பிறந்ததாகவும் புராணம் கூறுதலுமுண்டு. ஆகவே இந்த மஹர்ஷிகளையும் சேயிழையார் கோஷ்டியிலேயே பரிகணனம் செய்துகொள்ளக் குறையில்லை. (5.) அடுத்தபடி சூர்ப்பணகையின் புகழுரை கிடைக்கிறது; "तरुणौ रूपसंपन्नौ सुकुमारौ महाबलौ । पुण्डरीकविशालाक्षौ चीरकृष्णाजिनाम्बरौ—தருணௌ ரூபஸம்பந்நௌ ஸுகுமாரௌ மஹாபலௌ, புண்டரீக விசாலாக்ஷௌ சீரக்ருஷ்ண ஜிநாம்பரௌ." இத்யாதி ஸுப்ரஸித்தம். (6) அதன் பிறகு தாரையின் புகழுரை பரோக்ஷத்திலும் ப்ரத்யக்ஷத்திலும் அப்ரமேயமானது. "निवासवृक्षस्साधूनाम् आपन्नानां परा गतिः ।..........धातूनामिव शैलेन्द्रो गुणानामाकरो महान्—நிவாஸவ்ருக்ஷஸ் ஸாதூநாம் ஆபந்நாநாம் பராகதி:..........தாதூநாமிவ சைலேந்த்ரோ குணாநாமாகரோ மஹாந்." இத்யாதிகள் (தாரை) பரோக்ஷத்தில் செய்த ப்ரசம்ஸை. "त्वमप्रमेयश्च दुरासदश्च जितेन्द्रियश्चोत्तमधार्मिकश्च । अक्षय्यकीर्तिश्च विचक्षणश्च क्षितिक्षमावान् क्षतजोपमाक्षः—த்வமப்ரமேயச் ச துராஸதச் ச ஜிதேந்த்ரியச் சோத்தமதார்மிகச் ச, அக்ஷய்ய கீர்த்திச் ச விசக்ஷணச் ச க்ஷிதிக்ஷமாவாந் க்ஷதஜோபமாக்ஷ:." இத்யாதிகள் ப்ரத்யக்ஷத்தில் செய்த ப்ரசம்ஸை. (7) முடிவாக மந்தோதரியின் ப்ரசம்ஸை கிடைக்கிறது; "व्यक्तमेष महायोगी .... तमसः परमो धाता शंखचक्रगदाधरः । श्रीवत्सवक्षा नित्यश्रीः अजय्यः शाश्वतो ध्रुवः—வ்யக்தமேஷ மஹாயோகீ..........தமஸ: பரமோ தாதா சங்கசக்ரகதாதர:, ஸ்ரீவத்ஸவக்ஷா நித்யஸ்ரீ: அஜய்யச் சாச்வதோ த்ருவ:" இத்யாதியாக அவள் ஓலக்கத்தில் ஓலமிட்டவை ஒருமஹர்ஷியின் வாக்கிலும் வந்ததல்ல. இவ்விடத்திற்கு ரகுவீரகத்யம். "रजनिचरयुवतिविलपनवचनसमविषय निगममकुटनिकरमुखरमुख मुनिवर परिपणित" என்றன்றோ அவதரித்துள்ளது. ஆக இவ்வளவும் சேயிழையார் சென்றிறைஞ்சினபடியை மூதலித்தோமானோம். இச்சேயிழையார்க்குத் திங்கள் திருமுகத்து என்று விசேஷணமிட்டது முகத்தின் அழகைப்பற்றியன்று. பின்னையோவென்னில், "नवोनवो भवति जायमानः.......चन्द्रमाः" என்கிற வேதவாக்கியம் சந்திரன் புதிது புதிதாகத் தோன்றுவதாய் ஓதியுள்ளபடி ஒருத்தி சொன்னவார்த்தை மற்றொருத்தி சொல்லாதே ஒவ்வொருத்தியும் அபூர்வமான விஷயங்களையிட்டே சொன்னபடியால் நவம் நவமான வாய்மொழியை யுடையவர்களென்றவாறு. திருமுகம் என்பதனால் வார்த்தை விவக்ஷிதம்.

இறைஞ்சி என்ற வினையெச்சத்தை 'சொல்திரியினும் பொருள் திரியா வினைக்குறை" என்ற நன்னூற் சூத்திரத்தின்படி 'இறைஞ்ச' என்று செயவெனெச்சமாகக் கொள்ள

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

வேணும். ஏனெனில், திருப்பாவையில் இறைஞ்சினவர்களும் பறைகொண்டவர்களும் வேறுபட்டவர்களல்லர்; ஸ்ரீராமாயணத்தில் இறைஞ்சினவர்கள் மேலே விவரித்த மாதர்கள்; பறைகொண்டவர் சக்ரவர்த்திதிருமகனார். ஆகவே ஸமாநகர்த்ருகத்வமில்லாமையாலே இலக்கண நெறிக்கும் வழுவாத இம்முறை கொள்ளக்கடவதாயிற்று.

பறைகொண்டவர் பெருமாள். பறைகொள்ளுகையாவது ஸமீஹிதஸித்தி பெறுதல். பெருமாளுடைய ஸமீஹிதம் யாதுவென்னில் ராவண ஸம்ஹாரமும் ஸீதாபரிக்ரஹமும் என்று சிலர் நினைப்பர். இது நம் ஆசார்யர்களின் கோஷ்டியில் விலைச்செல்லுமதன்று. "விபீஷணோ வா ஸுக்ரீவ! யதி வா ராவணஸ் ஸ்வயம்" என்றருளிச் செய்தவரும் 'இன்று போய் நாளை வா' என்று அநுமதித்து விட்டவருமான பெருமாள் ராவணவதத்தை ஸமீஹிதமாகக் கொள்பவரல்லர். "த்வயி கிஞ்சித் ஸமாபந்நே கிம் கார்யம் ஸீதயா மம" என்று சரக்கறவருளிச் செய்த பெருமாள் ஸீதாலாபத்தையும் ஸமீஹிதமாகக் கொள்பவரல்லர். பஞ்சவடியிற் போந்த சூர்ப்பணகை "விபீஷணஸ் து தர்மாத்மா ந து ராக்ஷஸ சேஷ்டித:" என்று சொல்லக் கேட்டது முதலாகப் பெருமாளுடைய திருவுள்ளத்தில், அவனிருக்குமிடமேற வெழுந்தருளி அவனை யநுக்ரஹிக்கவேணுமென்கிற குதூஹலமே மிக்கிருந்தது. அப்படியே அவனை யநுக்ரஹிக்கப் பெற்றதுதான் அங்குப் பறைகொண்டவாறு. இவ்விஷயம் வால்மீகிமுனிவர் திருவாக்கில் பல விடங்களில் காணக்கிடந்தாலும் கம்பர் இதை வெகு சமத்காரமாக வெளியிட்டுள்ளார். கம்பராமாயணத்தில் இது மிகச் சிறந்த விடம்; (அதாவது) ஸ்ரீ விபீஷணாழ்வானைப் பரிக்ரஹித்தருளினவனந்தரம் அவனை நோக்கிக் கூறுகின்றார் பெருமாள்—

"குகனொடு மைவரானோம் முன்பு, பின் குன்று சூழ்வான்
மகனொடு மறுவரானோம், எம்முழை யன்பின்வந்த
அகனமர்காதலைய! நின்னொடு மெழுவரானோம்
புகலருங் கானம்போக்கிப் புதல்வரால் பொலிந்தானுந்தை." என்று.

நெடுநாள்வரையில் மகப்பேறில்லாது வருந்திக்கிடந்த சக்ரவர்த்திக்கு தைவயோகத்தாலே புதல்வர் நால்வர் ஏககாலத்திலே பிறக்கலாயினர். அதனால் த்ருப்தி பெறாதே இன்னமும் பிள்ளைகள் வேணுமென்று தோன்றி என்னை நோக்கி 'ராம! நீ கான்கஞ்சென்று இன்னமுஞ் சில ஸஹோதரர்களை ஸம்பாதித்து வா' என்று கட்டளையிட்டு அனுப்பினார்; புறப்பட்ட வேளை நன்றாயிருந்ததனால் கங்கா கூலத்திலும் பம்பாதீரத்திலும் ஸாகரதடத்திலும் ஸஹோதரர்களைப் பெற்றேன்; கங்கா கூலத்தில் கிடைத்த ஸஹோதரன் குஹன்; பம்பா தீரத்தில் கிடைத்த ஸஹோதரன் ஸுக்ரீவன்; இக்கடற்கரையில் கிடைத்த ஸஹோதரன் (விபீஷணா!) நீ காண்!. ஆக, சக்ரவர்த்தி என்னைக் காட்டுக்குப் போகவிட்டுப் புத்ரஸம்பத் ஸம்ருத்தி பெற்றான்—என்பது மேலே குறித்த கம்பர் செய்யுளின் கருத்து. பெருமாள் திருவுள்ளத்தால் இதுவே ஸமீஹிதஸித்தி யாதலால் இதனையே பறைகொண்டவாறாகக் கொள்வது பொருந்தும். "மன்னுடைய விபீடணற்காய் மதிளிலங்கைத் திசை நோக்கி மலர்கண் வைத்த என்னுடைய திருவரங்கர்" என்ற பெரியாழ்வார் திருமொழியும் இது தனக்குச் சாலவிணங்கும்.

இனி "அணிபுதுவை......சோதை சொன்ன" என்றுள்ள ப்ரபந்த விசேஷணமும் ஸ்ரீராமாயணத்திற்கு நன்கு இணங்கும்படியை உபபாதிப்போம். ஆண்டாளுக்கும வான்மீகி முனிவர்க்கும் அபலபிக்கவொண்ணாத வொரு ஸங்கிகர்ஷம் கோதாஸ்துதியில் வைதிக

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸாஹியில் விளக்கப்படுகிறது. அதில் "वल्मीकतः श्रवणतो वसुधात्मनस्ते जातो बभूव स मुनिः कविसार्वभौमः । गोदे! किमद्भुतमिदं यदमी स्रवन्ते वक्त्रारविन्दमकरन्दनिभाः प्रबन्धाः—வல்மீகதச் ச்ரவணதோ வஸுதாத்மநஸ் தே ஜாதோ பபூவ ஸ முநி: கவிஸார்வபௌம:, கோதே! கிமத்புதமிதம் யதமீ ஸ்வந்தே வக்த்ராரவிந்தமகரந்தநிபா: ப்ரபந்தா:" என்கிற ச்லோகத்திற்கு அடியேனுடைய வியாக்கியானத்தின் ஒரு பகுதி இங்கு எடுத்துக்காட்டப்படுகின்றது;

"தைத்திரீய யஜுர்ப்ராஹ்மணத்தில் *ओसँद्योतत्पृथिव्याः । यद्वल्मीकः* என்று ஓதப்பட்டுள்ளது. இதன் பொருளாவது-நிலத்தில் தென்படும் புற்றானது பூமிதேவியின் காது என்றபடி. ஆண்டாள் பூமிப்பிராட்டியின் அம்சமாதலால் பூமி என்றே கொள்ளத் தகுதியுடையவள். ஆகவே, புற்று இவளுடைய காதாக ஆயிற்று. புற்றில் நின்றும் தோன்றிய வால்மீகி முனிவர் ஆண்டாளுடைய காதில் நின்றும் தோன்றினவரென்று சொல்வதற்கு உபபத்தி ஏற்பட்டுவிட்டது. இங்ஙனம் உமது காதில் நின்றும் தோன்றிய ஒருவர் கவியரசர் என்று உலகமெங்கும் புகழ் பெற்றிருப்பதும், அவருடைய பிரபந்தமாகிய ஸ்ரீராமாயணம் மதுரமென்று புகழ் பெற்றிருப்பதும் அபலபிக்க வொண்ணாத விஷயங்களாகும். உலகத்தில் ஒருவருடைய காதில் நின்று உண்டான வஸ்துவுக்கு இவ்வளவு அதிசயம் ஏற்படுவது அப்ரஸித்தம். உம்முடைய காதின் பெருமையோ லோகவிலக்ஷணமாயுள்ளது. காதினுடைய பெருமையே இதுவானால் திருவாக்கின் பெருமையைப் பற்றிப் பேசத்தானுவதுண்டோ? உமது திருவாயோ அரவிந்தம்; அரவிந்தத்தில் மகரந்தம் ஸ்ரவிப்பது ஸஹஜமே யாதலால், மகரந்தம் போன்ற திவ்ய ப்ரபந்தங்கள் உமது திருவாக்கில் நின்றும் தோன்றினவென்பதில் வியப்பு ஒன்றுமில்லைகிடீர். ஸ்ரீராமாயணத்திற்கு ஏற்பட்டிருக்கும் போக்யதையைப் பற்றிச் சிறிது வியக்கவேண்டுமேயல்லது உம்முடைய திவ்யப்ரபந்தங்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற போக்யதையைப் பற்றிச் சிறிதும் வியக்கவேண்டிய ப்ரஸக்தியில்லை என்பது உள்ளுறை. இதனால், வால்மீகி கோகிலத்தின் சொற்களினும் கிளிமொழிக்கோதையின் சொற்களே பரமமதுரங்களென்பது பெறுவிக்கப்பட்டது."

இவை அடியேனுடைய கோதாஸ்துதி வியாக்கியான வாக்கியங்கள். இதனால் ஸ்ரீராமாயணத்திற்கும் தத்வக்தாவான வால்மீகிக்கும் ஒரு குறைவும், திருப்பாவைக்கும் தத்வக்த்ரியான ஆண்டாளுக்கும் ஒரு நிறைவும் கூறப்பட்டிருந்தாலும் ஸாம்யநிர்வாஹத்தில் தான் திருவுள்ளமென்பதை ஆலங்காரிகர்கள் நிர்ணயிக்கக் கடவர்கள். ஆக, பட்டர்பிரான் கோதையின் திருவாக்கிலிருந்து அவதரித்த திருப்பாவையும், கோதை திருச்செவியினின்று தோன்றினவரிடமிருந்து தோன்றிய ஸ்ரீராமாயணமும் ஸமானமே யென்னத் தட்டில்லை.

[சங்கத் தமிழ்மாலை] தமிழ் என்னுஞ் சொல்லுக்கு த்ராவிடபாஷை யென்பது மட்டும் பொருளன்று. இனிமை என்பதும் நிகண்டு ஸித்தமான பொருள். சப்பாம்மானைப் பிரயோகமுமொன்று காட்டுகிறேன். அதில் ஆரணிய காண்டத்தில் பெருமாள் பெரியவுடையார்க்கு சரமகைங்கர்யம் நிகழ்த்திப் பொறுக்கொணாத துன்பக்கடலில் ஆழ்ந்திருக்கையில் வானத்தில் சந்த்ரோதயமானதைக் கூறுகின்ற கம்பர் "வண்டுளர் கோதைச் சீதை" யென்னுஞ் செய்யுளில் "தண்டமிழ்த் தென்றலென்னுங் கோளரத் தவழுஞ்சாரல்" என்றார். இனிமைமிக்க தென்றல் காற்று என விவக்ஷித்துத் தமிழ்த் தென்றல் என்றார். "पाठ्ये गेये च मधुरम्—பாட்யே கேயே ச மதுரம்" என்று ப்ரஸித்திபெற்ற ஸ்ரீராமாயணத்தின் மாதுர்யம் சொல்லவும்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

வேணுமோ? மாலே என்றதும் ஸ்ரீராமாயணத்திற்கு நன்கு பொருந்தும்; ஸ்ரீராமாயணபாராயணத்தில் திருவடிக்காக அநுஸந்திக்கப்படும் தனியன்களுள் "கோஷ்பதீக்ருதவாராசிம் மசகீக்ருதராக்ஷஸம், ராமாயணமஹாமாலாரத்நம் வந்தே(அ)நிலாத்மஜம்" என்பதில் ஸ்ரீராமாயணம் மாலையாகச் சொல்லப்பட்டதன்றோ. இனி, சங்கம் என்றது ஸங்கம் ஸங்கமாகவிருந்து ரஸிகர்கள் அநுபவிக்கக் கூடியதென்று பொருள்படுகிற்றலால் இத்தன்மை திருப்பாவைக்கும் ஸ்ரீராமாயணத்திற்குமே ஏற்கும்.

[முப்பதும் தப்பாமே] ஸ்ரீராமாயணத்தில் பல நூறு கதைகள் இருந்தாலும் ஸாரமான கதைகள் முப்பது தேறும். பெருமாளுடைய பரத்வ ஸௌசீல்ய ஸௌலப்யாதி மஹாகுணங்களைக் கண்ணாடிபோல் காட்டும் கதைகள் முப்பதென்று கொள்ளலாம். "பாதகங்கள் தீர்க்கும்" என்ற பாசுரம் பணித்த பெரியார் "கோதைதமிழ் ஐயைந்து மைந்தும்" என்று ஆறைந்து முப்பதென்று காட்டியிருப்பதுபோலே ஆறு காண்டங்களிலும் ஐந்தைந்து கதைகளைச் சுவைமிக்கனவாகக் கொள்ளலாம். பாலகாண்டத்தில் 1. திருவவதாரம், 2 மாமுனி வேள்வியைக் காத்தல், 3. அஹல்யா சாப விமோசனம், 4. வில்லிறுத்து வைதேஹியை மணம்புணர்ந்தது, 5. பரசுராமபங்கம். (ஆக 5.) அயோத்யாகாண்டத்தில், 1. யுவராஜ்யபட்டாபிஷேகப்ரயத்னம். 2. கைகேயி சொல்லால் தொன்னகரம் துறந்தது. 3. குகனோடுங்கங்கைதன்னில் சீரணிந்த தோழமை கொண்டது. 4. பாதுகாபட்டாபிஷேகம். 5. அத்திரிபகவானாச்ரமத்தில் அநஸூயாதேவிக்கும் ஸீதாதேவிக்கும் ஸம்வாதம். (ஆக 5) .... இங்ஙனே காண்டங்கள் தோறும் ஸாரமான கதைகளை ஐவைந்தாக வகுத்துக் கொள்வது. [தப்பாமே] திருப்பாவையில் ஸ்ரீராமாயணஞ் சொல்லுவதாகத் தொடங்கி எதையேனும் அஸம்பத்தமாகச் சொல்லிவிடாமல் என்றபடி. "[illegible]" என்று ஒரு தரித்ரகவி சொன்னது வேதாந்தமூலமாக இல்லாமற்போனாலும் சில ரஸிகர்களின் உகப்புக்காவது உறுப்பாயிராநின்றதன்றோ; அப்படியுமில்லாமற் சொல்லலாகாதென்று சிக்ஷிக்கிறபடிபோலும்.

[இங்கு இப்பரிசுரைப்பார்.] இங்கு—இந்த வித்வத்ஸதஸ்ஸில், இங்குக் குழுமிய பண்டிதர்களின் முன்னிலையில்; இப்பரிசு—திருப்பாவைக்கும் ஸ்ரீராமாயணத்திற்கும் ஐககண்ட்யமாக; உரைப்பார்—உபந்யஸிக்க வல்லவர்கள். இங்ஙனே பொருள் சொன்னபோது ஸதஸ்யர்களின் கரகோஷம் செவிப்பட்டது.

[ஈரிரண்டுமால்வரைத்தோள் செங்கண் திருமுகத்துச் செல்வத்திருமாலால்] மால்வரைத்தோள்—பெரிய மலைபோன்றதாகச் சொல்லக்கூடிய புஜபலமுடையவனென்றபடி. தன்னவன் ஸௌர்யவீர்யபராக்ரம புஷ்கலனே யாகக் கடவன். "ஜய ஜய மஹாவீர! மஹாதீர தௌரேய! ......அஸஹாயசூர! அபாய ஸாஹஸ!" என்று போற்றநின்ற பெருமாளுக்கும் மால்வரைத்தோளுடைமை நன்கு பொருந்தும். [ஈரிரண்டு] "ஜாதோஸி தேவதேவேச! சங்கசக்ரகதாதர" என்னப்பட்ட கண்ணபிரானுக்கு சதுர்புஜத்வமுண்டேயல்லது இராமபிரானுக்குண்டோ? என்னவேண்டா; பம்பாஸரஸ் தீரத்திலே வந்து கண்ட திருவடி "ஆயதாச்ச ஸுவ்ருத்தாச்ச பாஹவ: பரிகோபமா:" என்று பஹுவசநப்ரயோகம் பண்ணிச் சொன்னதற்கு உபபத்தி காட்டும் ஸ்ரீகோவிந்தராஜர் "हनुमतो भक्तत्वेन तस्य चतुर्भुजवेषेण दृश्योऽभवत्" என்று வியாக்கியானித்துள்ளது காண்க. பரமபக்தையான மந்தோதரிக்கு மிங்ஙனே காட்சியளித்ததுண்டே. [செங்கண்] "சக்ஷுஷா தவ ஸௌம்யேந பூதாஸ்மி

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ரகுநந்தந!" என்று ஶபரியும், "ராம: கமலபத்ராக்ஷ:" என்று திருவடியும் ஈடுபட்ட திருக்கண்களையுடையவர் பெருமாள். திருவடியின் வாக்கை அநுவதிக்கின்ற கம்பர் "நளிரும் பனிக்குத் தேம்பாக் கஞ்சமொத்தலர்ந்த கண்ணா!" என்றதும் இங்கே நினைக்கததக்கது. பெருமாளுடைய திருக்கண்ணழகில் ஈடுபடாதாருமுளரோ?

[திருமுகத்துச் செல்வத் திருமாலால்.] பிராட்டியின் வழியாகப் பெருகுகின்ற செல்வத்தையுடைய ஸீதாபதியால் என்றபடி. திரு—பிராட்டி; முகத்து—அவள் வழியாக வந்த செல்வம்—கருணைச் செல்வம். "காவ்யம் ராமாயணம் க்ருத்ஸ்நம் ஸீதாயாச் சரிதம் மஹத்" என்று ஸ்ரீராமாயணமே சொல்லிவைத்தது. "ஸ்ரீமத் ராமாயணமபி பரம் ப்ராணிதி த்வச் சரித்ரே" என்று இதை அநுபாஷித்தபட்டர் "மாதர் மைதிலி! த்வயா லகுதரா ராமஸ்ய கோஷ்டீ க்ருதா" என்று தலைக்கட்டினார். இதை வேங்கடாத்வரியும் லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தில் "त्वय्येवायतते कृपा रघुपतेः—த்வய்யேவாயததே க்ருபா ரகுபதே:" என்கிற சுலோகத்தினால் மூதலித்தார். அந்த சுலோகத்திற்கு அடியேனுடைய தனிவியாக்கியானங்காண்க.

[திருவருள்பெற்று எங்கும் இன்புறுவர்] திருவின் அருள்பெற்று—ஸீதாபிராட்டியின் கருணையைப்பெற்று என்றபடி. "अभ्यषिञ्चन्नरव्याघ्रं प्रसन्नेन सुगन्धिना। सलिलेन—அப்யஷிஞ்சந் நரவ்யாக்ரம் ப்ரஸந்நேந ஸுகந்திநா, ஸலிலேந" என்கிற பட்டாபிஷேகச்லோகத்திலே ஸலிலேந என்று சொல்லவேண்டிற்றில்லை. அபிஷேகமென்பது ஸலிலகரணகமாகத் தானேயிருக்கும். வேறொன்றைக் கொண்டு அபிஷேகம் செய்யப்போகாதே. "அபிஷிச்ய சலங்காயாம் ராக்ஷஸேந்த்ரம் விபீஷணம்" என்ற விடத்திலே ஸலிலேந என்று சொல்லிற்றில்லையே. இங்குச் சொன்னது ஸாபிப்ராயம். 'ஸலிலேந' என்பதற்கு ஜலத்தினாலென்று பொருளன்று. "நீரிலே நெருப்புக் கிளருமாப்போலே குளிர்ந்த திருவுள்ளத்திலே அபராதத்தாலே சீற்றம் பிறந்தால் பொறுப்பிக்கைக்காக" என்கிற முமுக்ஷுப்படி ஸூக்திப்படியும், தண்ணீர் சுட்டால் தண்ணீரையிட்டே ஆற்றுகிற உலகியற்கையின்படியும், "चन्द्रमा मनसो जातः" என்று ஓதினபடி தண்ணளியே வடிவெடுத்த சந்திரனுக்கும் ஊற்றுவாயான பெருமாள் திருவுள்ளத்திலே ஸம்ஸாரிகளின் அபராதத்தாலே பிறக்கும் சீற்றத்தை யாற்றுமவள் பிராட்டியேயாதலால் அவளோடே சேர்த்து (அல்லது) அவளைக்கொண்டு அபிஷேகம் செய்வித்ததாகச் சொல்லிற்று. இதையே திருவருள்பெற்று என்று தலைக்கட்டிற்று. [இன்புறுவர்] ரமயதீதி ராம: ஆகையாலே ராமன்கதையினால் இன்புறாதாருமுளரோ? ... *

— ஆண்டாள் திருவடிகளே சரணம். —

[குறிப்பு:—இவ்வர்த்தங்கள் பெரும்பான்மையாக ஸதஸ்ஸில் அன்று விஜ்ஞாபனம் செய்யப்பட்டவையே. அதிஸ்வல்ப விஷயங்களே இந்த வியாஸத்தில் உபபாதநார்த்தமாகச் சேர்க்கப்பட்டவை யென்றுணர்க.] .... *

திருப்பாவையில் மற்றுள்ள பாசுரங்களிலும் ஸ்ரீராமாயணார்த்த மநுபவிக்கும் விதம்.

1. நீராடப்போதுவீர்—கூர்வேல் கொடுந்தொழில். வால்மீகி முனிவர் நாரதமஹர்ஷியிடம் ஸ்ரீராமகதை கேட்டபின்பு மாத்யாஹ்நிகஸ்நானஞ்செய்யப்போனதும் அங்கு "மாநிஷாத"ச்லோகமவதரிக்கும்படி வேடனுடைய கூர்வேல்கொடுந்தொழில் கண்டதும்.

2. செய்யாதனசெய்யோம். பரதாழ்வானை நோக்கி நீ ராஜ்யமாள வேணுமென்ன மூத்தாரிருக்க இளையார் முடிசூடியறியாத குலத்திலே பிறந்து செய்யாதவிது செய்யேனென்றது.

3. நீங்காதசெல்வம் நிறைந்து. பரதாழ்வான் தன் தாய் வாங்கிக்கொடுத்த ராஜ்யலக்ஷ்மியை ஆளமாட்டேனென்றது ஸ்ரீராமபக்தியாகிற நீங்காத செல்வம் நிறைந்திருந்ததனால். (4) தாழாதேசார்ங்கமுதைத்தசாமழை. "சார்ங்கம் வளைய வலிக்கும் தடக்கைச் சதுரன்" என்று ஆண்டாள் போற்றின சார்ங்கபாணிச்சேவகனார் "சரவர்ஷம் வவர்ஷஹ"

3·

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

என்னும்படி அம்புமாரி பொழிந்தது. (5) தாயைக்குடல்விளக்கம் செய்த. "கௌஸல்யா சுசுபே தேந புத்ரேணாதித தேஜஸா" என்னும்படி ஸ்ரீராமபிரானால் கௌஸல்யாதேவியார்

விளக்கமுற்றது. (6) முனிவர்களும் யோகிகளும் மெள்ளவெழுந்து. முனிவரென்பது குணானுபவ நிஷ்டரையும், யோகிகளென்பது கைங்கர்யநிஷ்டரையுமாகையாலே பரதாழ்வானை குணானுபவ நிஷ்டனும், இளையோன் கைங்கர்ய நிஷ்டனுமிருந்தமை சொன்னபடி. (7) கேட்டிலையோ பேய்ப்பெண்ணே. மந்தரை கைகேயியிடம் வந்து 'அடி பேதையே! உன் மகனை வஞ்சித்துச் செய்யும் செய்கை உன் காதில் விழவில்லையா? என்றது. (8) மிக்குள்ள பிள்ளைகளும் போவான் போகின்றாரைப் போகாமல். பெருமாள் காட்டுக்குப் புறப்பட அயோத்யாநகரவாஸி ஜனங்களெல்லாம் பின்தொடர்ந்துபோக அதற்கு அவகாசமளிக்காதது (9) துயிலணைமேல் கண்வளரும் மாமான். மாமான் என்றது மஹாமஹான் என்றபடியாய் தசரத சக்ரவர்த்தியைச் சொன்னபடி. அவன் ராம விச்லேஷத்தைப் பொறாமல் துயிலணை மேல் கண்துஞ்சினபடி சொல்லுகிறது. (10) சுவர்க்கம் புகுகின்றவம்மனாய். "யஸ்த்வயா ஸஹ ஸ ஸ்வர்கோ நிரயோ யஸ்த்வயா விநா" என்று பெருமாளோடு கூடியிருப்பதையே சுவர்க்கமாகச் சொல்லிப் பிராட்டி பின் தொடர்ந்தது.

(11) செற்றார்திறலழியச் சென்றுசெருச்செய்யும். "சமியா தாஞ்ஜர்த்தாச லோகாபவிஸ்ராவித:" என்கிறபடியே பாகவத த்ரோஹிகளைத் திறலழிக்க வைஞ்சென்றது. (12) நற்செல்வன். "லக்ஷ்மணோ லக்ஷ்மி ஸம்பந்ந:" என்கிறபடியே * ஸ்ரோதாஸஹஸ் திவாரஸ்மிழுதைபாகிற நற்செல்வம்படைத்த இளையபெருமாள் * அஹம் ஸர்வம் கரிஷ்யாமியென்று அத்தாணிச்சேவகம் பெற்றது. *தென்னிலங்கைக் கோமானைச் செற்ற மனத்துக்கினியானை* என்றதும் இப்பாட்டுக்கு உயிர்நிலை. (13) பொல்லாவரக்கனைக்கிள்ளிக்களைந்தானை. அரக்கர்களையெல்லாம் கிள்ளிக் களைந்தொழிக்கத் திருவுள்ளம்பற்றினபடி. (14) வெண்பல் தவத்தவர் தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார். 'மம மம' என்றிராமே 'தவ தவ' என்றிருக்கும் பரதாழ்வான் முதலான அனைவரும் பெருமாளைத் திருவயோத்தியிலே கொண்டு சேர்க்கப் புறப்பட்டது. (15) நானேதானாயிடுக. "ந ஹ்யஹம் ந அஹம் ஸமர்தோஸ்மி ராஜ்யம் பாலயிதும் ... ... நந்தம் ..." என்று பரதாழ்வானநுஸந்தித்தபடி.

(16) மணிவண்ணன் கென்னலே வாய்நேர்ந்தான். "பூர்ணே சதுர்தசே வர்ஷே" என்னும்படி பதினாலாண்டு நிரம்பினவொழியத் திருவயோத்தி மீள்வதில்லையென்று வாய்நேர்ந்தது. (17) செம்பொற்கழலடிச்செல்வா. "அபிஷேகாய பாதுகே ... ... ஹேமபரிஷ்க்ருதே" என்று ஹேமபாதுகையைப் பெற்றுமீண்ட செல்வன் பரதாழ்வான். (18) உந்துமதக்களிற்றனோடாததோள்வலியன். "ம ஜம்வா விஸ்ருஜ ... ..." என்கிறபடியே ராக்ஷஸவேட்டையாடின வீரம். (19) எத்தனையேலும் பிரிவாற்றகில்லாய். தைவயோகத்தாலே நேர்ந்த பிராட்டியின் பிரிவை ஆற்றமாட்டாதிருந்தது. (20) செற்றார்க்குவெப்பங் கொடுக்கும்விமலா. "ஸதேவ ... ..." என்று உலகம் நடுங்கப் பேசினார் பெருமாள்.

(21) மாற்றாருனக்குவலிதொலைந்து. ஜனஸ்தான வாஸிகளான கரதூஷணாதிகளும் மற்றுமுள்ள அரக்கர்களும் வலிமாண்டொழிந்தது. (22) செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ—எங்கள்மேல் சாபமிழிந்து. "சக்ஷுஷா தவ ஸௌம்யேன பூதாஸ்மி ரகுநந்தந!" என்று சபரி தான் ஸ்ரீராமகடாக்ஷத்தாலே பாபமொழிந்து பரமகுரு பதனிணை சேர்கின்றமை சொன்னது. (23) சீரியசிங்கமறிவுற்றுத் தீவிழித்து.......எப்பாடும்பேர்ந்து உதறி. ராகவஸிம்ஹம் தான்வந்த காரியத்தை நினைத்து நெருப்புப்பொறி பறக்க விழித்து எங்கும் திரிந்து

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

விரோதிவர்மங்களைக் கிழங்கெடுத்தபடி. (24) தென்னிலங்கைசெற்றாய்—இன்றுயாம்வந்தோ மிங்கு. இலங்காபுரியைச் செறுவதற்காக இங்குவந்த இராமபிரானே! அன்றே பஞ்சவடி யிலேயே வந்து சேரவேண்டிய யாம் இன்று இங்குவந்து அடைந்தோம், இரங்கியருள வேணும் என்று (அதாவி ஹூஹாராஷயெ:) விபீஷணாழ்வான் விண்ணப்பம் செய்திறபடி. (25) திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி வருத்தமும் தீர்ந்துமகிழ்ந்து. ராவண ஸம்ஹார மான பின்பு பிரமன் சிவனிந்திரன் முதலான தேவர்கள் அங்கேறவந்து பிராட்டியின் சேர்த் தியையும் பெருமாளுடைய பராக்ரமத்தையும் பாடி ராவணனால் பட்டிருந்த வருத்தம் தீர்ந்து மகிழ்ச்சியடைந்தபடி.

(26, நீராடுவான் மேலையார் செய்வன. இனி, பரம்பராப்ராப்தமான ராஜ்யலக்ஷ்மியை யடைவதற்கு மகுடாபிஷேகமாகவேண்டும்படியை ப்ரஸ்தாவித்தல்.

(27) யாம்பெறு சம்மானம் நாடுபுகழும் பரிசினால்நன்றாக. மகுடாபிஷேக ஸமயத்தில் திருவடி விபீஷணாழ்வான் முதலானோர் உலகம்புகழ ஸன்மானங்கள் பெற்றபடி. 28) கானம் சேர்ந்து உண்போம். கானமென்றது ஸாமம், வால்மீகியின் ஆச்ரமத்திலிருந்து குசலவர்கள் திருவயோத்திவந்து ஸ்ரீராமாயணத்தை ஆச்சரியமாகப்பாட அந்த மஹாகோஷ்டியிலே "ஸ ஹாவி சாரை: வஸிஷ்டதஹுஸெ:" என்கிறபடியே பெருமாள்தாமும் அங்வயித்து அநுப வித்து ஆனந்திததபடி சொல்லிற்றாயிற்று. (29, 30) முன்னமே விரித்து விரித்துரைத் தாயிற்று.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

ஸ்ரீபார்த்தசாரதிஸ்வாமி தேவஸ்தானம், திருவல்லிக்கேணி, சென்னை-5

நிகழும் சோபக்ருதுஞு மாசிமீ" கீழே குறிக்கப்பட்டபடி ஷடி ஸந்நிதியில் காஞ்சீ புரம் ஸ்ரீ ப்ரதிவாதிபயங்கரம் உ. வே. அண்ணங்கராசாரியர் ஸ்வாமியால் உபந்யாஸங்கள் நடை பெறும். அனைவரும் வரும்படி ப்ரார்த்திக்கிறோம்.

1964	16	மாசி	4	ஞாயிறு	மாலை 7—9	....	ஸ்ரீபாஷ்யவிசேஷார்த்தங்கள்.
,,	17	,,	5	திங்கள்	,,	...	
,,	18	,,	6	செவ்வாய்	,,	....	கீதாபாஷ்ய விசேஷார்த்தங்கள்.
,,	19	,,	7	புதன்	,,	....	
,,	20	,,	8	வியாழன்	,,	...	ஸத்ஸம்ப்ரதாய விசேஷார்த்தங்கள்.
,,	21	,,	9	வெள்ளி	,,	....	

ரதஸப்தமி யுத்ஸவம்.

தை அமாவாஸ்யைக்குப் பிறகு வரும் சுக்ல ஸப்தமி ரத ஸப்தமி யெனப்படும். இது ஒரு புண்ய கால விசேஷமாகக் கொண்டாடப்படுகிறது. இதற்காக திவ்யதேசங்களி லெங்கும் விசேஷமான மஹோத்ஸவம் நடத்தப்படுகிறது. திருமலையில் இதற்காக ஏழு தடவை திருவீதி யுத்ஸவம் நடைபெறுவதாகக் கேள்வி. மற்ற திவ்ய தேசங்களில் காலை வேளை ஸூர்ய ப்ரபை வாஹனத்திலும் மாலை வேளை சந்திரப்ரபை வாஹனத்திலும் திருவீதி யுத்ஸவம் வெகு சிறப்பாக நடைபெற்று வருகிறது. காஞ்சீபுரத்தில் தேவப் பெருமா ளுக்கு இந்த மஹோத்ஸவம் வெகு விபவமாக நடைபெற்று வந்தது. தேவஸ்தானத்திற்கு அதிக வருமானமில்லாத முற்காலத்தில் நடந்துவந்த விபவங்களையும், விசேஷ வருமான மேற்பட்டுள்ள இக்காலத்தில் நடந்துவரும் விதத்தையும் எண்ணிப் பார்க்கும்போது பக்தர் களின் மனத்தில் மிகுந்த பரிதாபம் ஏற்படுகிறது. திருமலையிலும் ஸ்ரீரங்கத்திலும் ஒரு நாளைக்கு நிவேதனமாகிற ப்ரஸாதம் தேவப்பெருமாளுக்கு இரண்டொரு வருஷங்களுக்குக் காணுமென்று பலர் சொல்லுகிறார்கள். நேற்று ரதஸப்தமி யுத்ஸவம் இரண்டு வேளையும் வாஹன ஸேவை இல்லாமலே கேடயத்தில் நடைபெற்றது. காரணமென்னவென்றால்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

உபயக்காரர்கள் வாஹனப் புறப்பாட்டுக்குப் போதுமான பணம் தரவில்லையென்று சொல்லப்படுவதாகக் கேள்வி. இந்த தேவஸ்தானத்திற்கு ஒரு மாதத்தில் எவ்வளவு வருமானமென்பது பொதுமக்களுக்குத் தெரிய வராமலேயிருக்கிறது. திருமலை திருப்பதியைச் சேர்ந்த தேவஸ்தானங்களுக்கு மாதந்தோறும் எத்தனை லக்ஷம் வருமானமென்பது பிரதிமாதமும் பத்திரிகையில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது. இந்த தேவஸ்தானத்திலும் அப்படி வெளியிட வேண்டியது அவசியமல்லவா? செலவுகளைப் பற்றி ஒன்றும் வெளியிட வேண்டா. வருமானங்களை மட்டும் வெளியிட்டால் போதும். உபயமில்லையென்றால் நித்ய நைமித்திக உத்ஸவம் எதுவும் நிறுத்தப்பட வேண்டியதே யென்கிற கொள்கையே வலுத்திருக்கிறது. இதைப்பற்றி விசாரணை யெடுத்துக் கொள்ள வேண்டியவர்கள் வாளாவிருக்கும்போது நமக்கென்ன வந்ததென்றே பலரும் உதாஸீனர்களாயிருக்கிறார்கள்.

——— இங்ஙனம், தி. ஆ. பார்த்தஸாரதி.

தைமாஸ மஹோத்ஸவம்.

மார்கழி முப்பதும் எங்கும் மஹோத்ஸவமாகச் சென்றது. தை மாதத்தில் ஆழ்வாரொருவருடையவும், ஆசாரியர்கள் மூவருடையவும் மஹோத்ஸவங்கள் பக்த பாகவதோத்தமர்களுக்குப் பரமானந்த ஸந்தோஷம்.

1. ஆழ்வாரொருவர் திருமழிசைப்பிரான். * துய்யமதிபெற்ற மழிசைப்பிரான் பிறந்தநாளென்று நற்றவர்கள் கொண்டாடும் நாள் தையில் மகம். இவ்வாழ்வாருடைய திருவவதார ஸ்தலமான திருமழிசையில் இம்மஹோத்ஸவம் வெகு சிறப்பாக நடைபெற்று நிறைவேறியது.

ஸ்ரீயதோக்தகாரி ஸன்னிதியில் தையில் மகம். திருமழிசைப்பிரானுக்கு எம்பெருமானுடைய சயனத்திருக்கோலத்திலேயே விசேஷமான அபிநிவேசமாதலால் இவ்வாழ்வார் தம்முடைய வாழ்நாளை அதிகமாகக் கழித்த இடங்கள் இரண்டே—கச்சித்திருவெஃகாவும் திருக்குடந்தையும். திருக்குடந்தையில் இவ்வாழ்வார்க்குத் தனி ஸன்னிதி நெடுநாளைக்கு முன்னரே ஏற்பட்டு அங்கும் வெகு சிறப்பாக மஹோத்ஸவம் நடைபெற்று வருகிறது. காஞ்சியில் ஸ்ரீயதோக்தகாரி ஸன்னிதியில் இவ்வாழ்வாருடைய விபவத்தில் எம்பெருமான் அர்ச்சாவதார ஸமாதியைக்கடந்து அற்புதமாகக் காட்டியருளின காட்சி இவருடைய வைபவத்தில் விளங்கியதே, "கணிகண்ணன் போகின்றான் காமருபூங்கச்சி, மணிவண்ணா! நீ கிடக்கவேண்டா, துணிவுடைய செந்நாப்புலவனும் போகின்றேன் நீயுமுன்றன் பைந்நாகப் பாய்சுருட்டிக்கொள்." என்று ஆழ்வார் பிரார்த்தித்தபடியே பைந்நாகப் பாய்சுருட்டிக் கொண்டெழுந்தருளி மீண்ட மஹோத்ஸவம் ஐதிஹ்யோத்ஸவமாக இத்தலத்தில் நெடுங்காலமாக நடத்தப்பட்டு வருகிறமுறையில் நேற்று 30–1–64ல் மஹாவிபவம் பொலிய நடந்தது.

2. எம்பார் மஹோத்ஸவம். எம்பெருமானாருடைய சிறியதாயார் திருக்குமாரரான கோவிந்த பட்டர் என்கிற எம்பார் திருவவதரித்த தலம் மதுரமங்கலமென வழங்கப்படும் மழலைமங்கலம். இவ்வாசார்யருடைய திருவவதாரம் தைப்புனர்வஸுவில். அங்கே பத்து நாள் மஹோத்ஸவம் சிறப்பாக நடந்து தலைக்கட்டியது.

3. குருபுஷ்யமஹோத்ஸவம். ஸ்ரீபெரும்பூதூரில் எம்பெருமானாருடைய திவ்ய மங்கள விக்ரஹம் தைப்பூசத்தில் திருப்ரதிஷ்டை பெற்றதனால் இந்த புஷ்யம் குருபுஷ்யமென வழங்கப்பெற்று வருகின்றது. இது மூன்று நாள் மஹோத்ஸவமாக இருவேளையும் வாஹனப் புறப்பாடுகளுடன் மஹா விபவமாகக் கொண்டாடப்பட்டுவருகிற முறையில் இனிது நிறைவேறியது.

4. கூரத்தாழ்வான் மஹோத்ஸவம். * மொழியைக் கடக்கும் பெரும்புகழான் வஞ்சமுக்குறும்பாங்குழியைக் கடக்கும் நங்கூரத்தாழ்வான் * என்று தனிச் சிறப்புப் பெற்ற மஹாசார்யர் ஸ்ரீவத்ஸசிஹ்நமிச்ரரான ஆழ்வான். இவருடைய திருவவதாரஸ்தலமான கூரமாநகரில் பத்து நாள் விசேஷ வைபவமாக நடைபெற்று நேற்று ஹஸ்த நக்ஷத்திரத்தில் தலைக்கட்டிற்று. ... ... (*)

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீரஸ்து.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ ராமாயண கௌஸ்துபம்.

— ஸ்ரீ காஞ்சீ. ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் —

श्रीशैलपूर्णगुरुवर्यपदाब्जभृङ्गश्रीभाष्यकारपदपद्मयुगं प्रपद्य ।
रामायणस्थबहुपद्यसदर्थसारं श्रीकौस्तुभाख्यकृतितः प्रकटीकरोमि ॥
काञ्चीवादिभयङ्करवंशीयाण्णङ्गरार्यकृतिरेषा ।
श्रीरामायणकौस्तुभनाम्नी सततं विभातु विबुधहृदि ॥

நம்முடைய பூர்வாசாரியர்கள் அநுபவித்தருளின இதிஹாஸபுராணங்களில் ஸ்ரீராமாயணமொன்றே தலைமை பெற்றிருக்கும். இதைத்தான் இதிஹாஸச்ரேஷ்டமென்று வ்யபதேசித்தருளினார்கள். பகவத்விஷயாதிகளிலும் மிக மிக வெடுத்துக் கையாள்வதும் வியாக்யானிப்பதும் ஸ்ரீராமாயணமே. இதற்கடுத்தபடியாக ஸ்ரீவிஷ்ணுபுராணம். அதற்கடுத்தபடியாக பகவத்கீதை. அவையிரண்டையும் விட ஸ்ரீராமாயணத்திற்கே ப்ராபல்யமென்பது புநருக்தம். ஸ்ரீராமாயணத்திலிருந்து நம் ஆசாரியர்கள் நாலாயிரதிவ்யப்ரபந்த வியாக்கியானங்களில் பெரியவாச்சான்பிள்ளையும் வடக்குத்திருவீதிப்பிள்ளையும் கச்சத் கச்சத்தாக வியாக்கியானித்தருளியிருப்பவற்றைத் திரட்டி ஸ்ரீராமாயணஸாரமென்று பலவாண்டுகட்கு முன்பு வெளியிட்டிருக்கிறேன். இப்போது சேகரிக்கப்படுகிற இந்த ஸ்ரீராமாயண கௌஸ்துபத்தின் ப்ரமேயமென்னவென்றால்—இன்சுவையே வடிவெடுத்த ஸ்ரீராமாயணத்தை ஆங்காங்கு உபந்யஸிப்பவர்களுக்கும் உபந்யஸிக்கவிரும்புமவர்களுக்கும் உபகாரகமாக ஸ்ரீராமாயண ஸ்லோகரத்னங்கள் பலவற்றுக்கும் இன்சுவைப் பொருள்களை உபஹரிப்பதேயாம். அப்பொருள்கள் பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளின் மணித்திரள்களேயன்றி ஸ்வகல்பிதமன்று.

— இனி க்ரந்தாரம்பம் —

ஸ்ரீராமாயணத்தின் உபக்ரமம் வால்மீகி நாரத ஸம்வாதமாக நிகழ்ந்திருக்கின்றது. அதாவது வான்மீகி முனிவர் நாரதமஹர்ஷியைக் கேட்பதாகவும் அவர் விடை கூறுவதாகவும் தோன்றியிருக்கின்றது. ஸ்ரீவிஷ்ணுபுராணம் மைத்ரேயபராசர ஸம்வாதமாக அவதரித்தது. ஆனால் அதன் அவதாரக்ரமத்திலும் இதன் அவதாரக்ரமத்திலும் வாசியுள்ளது. பராசர பகவான் அநுஷ்டானத்தை முடித்துக்கொண்டு ஸ்வாச்ரமத்தில் வீற்றிருக்க, அங்கே மைத்ரேயர் சென்று ஸ்வரூபாநுரூபமாகத் தெண்டனிட்டு ப்ரச்னம் பண்ணினதாக அங்குள்ளது. இங்கு "நாரதம் பரிபப்ரச்ச வால்மீகி:" என்றிவ்வளவே உள்ளது. வான்மீகி முனிவரின் ஆச்ரமத்தை நோக்கி தேவலோக மஹர்ஷியாகிய நாரத பகவான் எழுந்தருளினதாகவும் அவரை நோக்கி வான்மீகி பதினாறு கேள்விகள் கேட்டதாகவும் அவற்றுக்கு நாரதர் விடை கூறும் முகத்தால் ஸ்ரீராம கதையை ஒருவாறு கூறித் தலைக்கட்டுவதாகவும் அமைந்துள்ளது. அநவரதமும் "ராம ராமேதி கூஜநம் செய்து போதுபோக்கும் வால்மீகி கோகிலத்திற்கு ஸ்ரீராம கதையையே கேட்க விருப்பமிருந்தும், தம்மிடமெழுந்தருளின நாரதமுனிவரை நோக்கி

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ராமகதையைச் செவிகுளிரக் கேட்க விரும்பியிருக்குமெனக்கு அதனைச் சொல்லுமையா! என்று ஆர்ஜவத்தோடு கேட்கலாமாயிருக்க, அங்ஙனம் கேளாமே சில குணவிசேஷங்களைச் சொல்லி இவற்றையுடையவன் யாவனோ அவனைச் சொல்லுமென்று கேட்டது எதற்காக வென்னில்; இத்தகைய திருக்குணங்களையுடையவர் சக்ரவர்த்தி திருமகனொருவரேயன்றி மற்றெவருமல்லர் என்கிற உறுதி வான்மீகி தமக்கு உள்ளது; அது, ப்ரஹ்மவித்துக்களில் தலைவரான நாரத மஹரிஷியின் உக்தியாலும் ஸுப்ரதிஷ்டிதமாக வேணுமென்கிற அபிநிவேசத்தினாலத்தனை. இராமபிரானுடைய பெருமையைச் சொல்லுமென்று வினவி அனத அவர் சொல்லக் கேட்பதினுங் காட்டில் ஸாமாந்யமாக ப்ரச்னம் பண்ணி விசேஷமாகச் சொல்லக் கேட்பது ரஸவத்தரமன்றோ? எம்பெருமானுடைய திருவடிகளில் ஆச்ரயித்தவர்களில் எவர் பெரும் புகழாளரோ அவரைச் சொல்லும் என்று வினவினவளவிலே, வினவப்பட்டவர் கூரத்தாழ்வானொருவரே அத்தகைய பெரும் புகழாளர் என்று விவரித்துரைத்தால் அது ரஸவத்தரமாகுமேயல்லது, கூரத்தாழ்வானுடைய பெருமையைச் சொல்லுமென்று அபேக்ஷித்து அதையொருவர் சொல்லக் கேட்பதில் சிறப்பில்லையன்றோ. ஆக, ஸ்ரீராமகதையைக் கேட்கக் குதூஹலங் கொண்டிருந்த வான்மீகி முனிவர் மறைத்துக் கேட்டது ஆர்ஜவக் குறையினாலென்று நினைக்கவும் தகாது. வாயிமதாய-ஷு திஷா வநாய-ஜெவ.

1. தபஸ்ஸ்வாத்யாயநிரதம் தபஸ்வீ வாக்விதாம் வரம்.
நாரதம் பரிபப்ரச்ச வால்மீகிர் முநிபுங்கவம்.

இது வால்மீகியல்லாத வேறொருவர் பணித்ததுபோல் தோன்றநின்றாலும் வால்மீகி பணித்ததே. "நாரதம் முநிபுங்கவம் வால்மீகி ரஹம் பர்யப்ருச்சம்" என்று சுலோக மியற்றியிருக்கலாமே யென்னில், அது லௌகிக கோஷ்டிகளில் பரிமாறும் முறை; இது மஹர்ஷி கோஷ்டிகளில் பரிமாறும் முறை என்று கொள்க. இங்கு வால்மீகி தமக்கு தபஸ்வீ என்று விசேஷணமிட்டுக் கொண்டது தம்மைத் தபோநிஷ்டராகச் சொல்லிக்கொள்ள விரும்பியன்று; "தபஸ்வீ தாபஸச் சோச்ய:" என்கிற நிகண்டுவின்படி 'நிர்வேதமுடையவர்' என்கிற பொருளை விரும்பியாம். நைஷத காவியத்தில், நளமஹாராஜனால் பிடியுண்ட ஹம்ஸம் தன்னை விட்டுவிடுமாறு வேண்டிக்கொள்ளுகையில் அவ்வரசன் மனத்தில் இரக்கம் பிறக்குமாறு சொல்லுமடைவிலே "மதேகபுத்ரா ஜநநீ ஜராதுரா நவப்ரஸூதிர் வரடா தபஸ்விநீ" என்றது. இங்கு தபஸ்விநீ என்றது தபஸ்வீ என்பதன் ஸ்த்ரீலிங்கரூபம். இத்தால் சோசநீயார்த்தே லோகப்ரயோகமுமுண்டென்று காட்டினபடி. அது நிற்க. ஆசார்யோபஸத்தி பண்ண விரும்புமவனுக்கு நிர்வேதமே முக்கியம் என்னுமிடத்தை *பரீக்ஷ்ய லோகாந் கர்மசிதாந் ப்ராஹ்மணோ நிர்வேதமாயாத்* என்கிற ச்ருதியும் ஓதிற்று. "ஸோஹமஸ்ய ததாதநாச்ரவணந் ததாத்ரவணந் ஸம்ச்யதே ஹி" என்கிற ப்ராஹ்மஸூத்ரமும் காட்டிற்று. ப்ரக்ருதத்தில் வான்மீகிக்கு எவ்விதமான நிர்வேத மென்னில், ஆசார்யன் முகமாகக் கேட்டாலன்றி வித்யை ப்ரதிஷ்டிதமாகாதென்கிற சாஸ்த்ரார்த்தத்தைத் தாம் உணர்ந்தவராகையாலே அப்படி உபதேசிக்கவல்ல ஆசார்யனொருவர் நேர்படவில்லையே! என்றிருந்த நிர்வேதமேயாயிற்று. சொல்லுகிற ஆசாரியர் தம்முடைய வாக்கு வல்லமையினாலே சடக்கெனச் சொல்லிவிடுவதில் ரஸமில்லை; விவக்ஷிதமான விஷயத்தை மனனம் பண்ணிப்பண்ணித் தாமநுபவித்து உருகுந் தன்மையுமிருக்கவேணுமென்பதைக் காட்டவே நாரதமஹர்ஷிக்கு வாக்விதாம் வரம் என்றும் முநிபுங்கவம் என்றும் இரண்டு விசேஷணங்களிடப்பட்டன. வால்மீகி முனிவர் நாரத மஹர்ஷியை வினவின அம்சம் யாதென்னில்; அது மேல்மூன்று சுலோகங்களில் காண்க.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

2. கோ ந்வஸ்மிந் ஸாம்ப்ரதம் லோகே குணவாந் கச் ச வீர்யவாந்.
தர்மஜ்ஞச் ச க்ருதஜ்ஞச் ச ஸத்யவாக்யோ த்ருடவ்ரத:.

இது முதலான மூன்று ச்லோகங்களில் பதினாறு திருக்குணங்களையடக்கி இவையுடையவன் யாவனென்று கேட்கப்படுகிறது. இதில் மூன்று நிர்ப்பந்தங்கள் வைக்கப்பட்டன; அவை யாவன 1. அஸ்மிந் லோகே என்கையாலே தேவலோகத்திலுள்ளவொருவனைச் சொல்லலாகா தென்பது முதல் நிர்ப்பந்தம். 2. ஸாம்ப்ரதம் என்கையாலே என்றைக்கோ இருந்து மறைந்து போனவனைச் சொல்லலாகாதென்பது இரண்டாம் நிர்ப்பந்தம். 3, *மஹர்ஷே! த்வம் ஸமர்த்தோஸி ஜ்ஞாதுமேவம்விதம் நரம்* என்கையாலே தேவயோனியிற் பிறந்தானொருவனைச் சொல்லுகையன்றிக்கே மநுஷ்யயோனியிற் பிறந்தவனையே சொல்லவேணுமென்பது மூன்றும் நிர்ப்பந்தம். ப்ரச்நம் பண்ணின திருக்குணங்களின் சுருக்கமான விவரணம் கேளீர்.

1. குணவாந். பொதுவாகக் குணமுடையவன் என்பது இதன் பொருளன்று. குண: என்கிற சொல்லானது சீலம் (அல்லது) ஸௌசீல்யம் என்கிற குண விசேஷத்திற்குச் சிறப்புப்பெயர். ஆளவந்தார் ஸ்தோத்ரரத்னத்தில் * வசீ வதாந்யோ குணவாந் * இத்யாதிச்லோகத்திலே குணங்களிடையே குணவாந் என்றருளிச் செய்திருப்பது கொண்டு இதனை எளிதாக வுணரலாம். சீலமென்றாலும் ஸௌசீல்யமென்றாலும் பர்யாயம். பெருமையனாயிருப்பவன் தனது மேன்மையைக் கணிசியாதே தாழ்ந்தவர்களோடு கலந்து பரிமாறுகைக் கிடான குணமிது. குஹப்பெருமாள் போல்வார் இக்குணத்திற்கு இலக்கு.

2. வீர்யவாந். குண ஸூர்ணியில் சௌர்யவீர்ய பராக்ரமங்கள் மூன்றும் ஒரு சேர்த்தியாகப் பேசப்படுகின்றன. எதிரிகளின் சேனை எவ்வளவு ப்ரபலமாக இருந்தாலும் அதுகண்டு அஞ்சாமை; அந்தச்சேனையினுள்ளே அஸஹாயனாய்ப் புகுந்து எதிரிகளை அநாயாஸமாகப் பொடிபடுத்துந் திறல்; அப்படிச் செய்யுமளவில் தனக்குச் சிறிதளவேனும் க்ஷதியேற்படாதபடியான மிடுக்கு. ஆக இம்மூன்றும் சௌர்ய வீர்ய பராக்ரமங்களாம். இங்கு ஒன்றைச் சொன்னதுமற்றவற்றையுஞ் சொன்னபடி. கரதூஷணவதத்தில் காணத்தக்கதிது.

3. தர்மஜ்ஞ:. தருமமறிந்தவனென்று பொருள். ஆண்டாள் நாச்சியார் திருமொழியில் கண்ணபிரானை * தருமமறியாக் குறும்பன் * என்கிறாள். அவ்வியல்புக்கு நேர்மாறாகத் தருமமறிந்தவனென்று கூறப்படுகிறான் இராமபிரான். இங்கு விவக்ஷிதமான தருமம் எதுவாயிருக்கக்கூடுமென்று பார்க்கில், ஸுந்தரகாண்டத்தில் (38–41.) *ஆந்ருசம்ஸ்யம் பரோ தர்ம: த்வத்த ஏவ மயா ச்ருத:* என்று பிராட்டி பலகாலும் ஆந்ருசம்ஸ்யமே பரம தர்மமென்று பெருமாள் உபந்யஸிக்கக் கேட்டதாகச் சொல்லுகையாலே கருணையே தருமமாகக் கருதப்படுகின்றது. பெருமாளுக்குக் கருணாகுத்ஸ்தனென்றன்றோ ப்ரஸித்தி. *விதித: ஸ ஹி தர்மஜ்ஞச் சரணாகத வத்ஸல:" என்கிற பிராட்டியின் திருவாக்குப்படி சரணாகத வாத்ஸல்யமும் தருமமெனக் கொள்ளத்தகும்.

4. க்ருதஜ்ஞ: அயோத்யாகாண்டத்தில் (1-11) * கதஞ்சிதுபகாரேண க்ருதேநைகேந துஷ்யதி, நஸ்மரத்யபகாராணாம் சதமபி ஆத்மவத்தயா* என்று கூறினபடியே தீமைகள் பல செய்பினும் அவற்றைப் பொருள்படுத்தாதே, நன்மை லவலேசம் கிடைத்தாலும் அதனையே பெருக்கமதித்திருப்பவன்.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

5. ஸத்யவாக்ய:. உள்ளதை உள்ளபடியே கண்டு உள்ளபடியே சொல்லுவது தான் ஸத்யமென்று உகைக்கொண்டிருப்பது ஒவ்வாது. ஒன்றை வேறொன்ருக மயங்குகையாகிற மருள் மனிதர்க்கு ஸஹஜமாகையாலே மருண்டு சொல்லுமவர்களை அஸத்யவாதி என்னவேண்டிவரும். இதை பத்தாமத்யாயத்தில் "க்ஷமா ஸத்யம் தமச் சம:" என்றவிடத்து பாஷ்யத்தில்—உள்ளதை உள்ளபடியே கண்டு சொல்லுவது ஸத்யம் என்னுமல் தான் கண்டபடியே சொல்லுவது ஸத்யம்' என்றருளிச்செய்து, தான் கண்டபடியே சொல்வதுங்கூட சில விடங்களில் அஸத்தமாக முடியுமாதலால் "ஸத்யம் பூதஹிதம் ப்ரோக்தம்" என்ற வ்யாஸஸ்ம்ருதியையே விஸ்தாரமாகக் கொண்டு நிகமனம் செய்தருளினர் பாஷ்யகாரர்.

6. த்ருடவ்ரத:. ஒரு காரியத்தைச்செய்து முடிக்கவேணுமென்கிற சங்கற்பத்திற்கு விரதமென்று பெயர். எந்த காரணத்தாலும் அது தடைபடாமல் உறுதியாயிருக்கப் பெற்றவன் த்ருடவ்ரதனெனப்படுவன். தண்டகாரண்ய வாஸிகளான முனிவர்களுக்கு அபயமளித்தபோது பிராட்டி அந்த ப்ரதிஜ்ஞையை சிதிலமாக்கப் பார்க்கையில் "அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம் த்வாம் வா ஸீதே ஸலக்ஷ்மணாம், நஹி ப்ரதிஜ்ஞாம் ஸம்ச்ருத்ய ப்ராஹ்மணேப்யோ விசேஷத:" என்று சொல்லியும், விபீஷணாழ்வான் திறத்தில் "ந த்யஜேயம் கதஞ்சந" என்று சொல்லியும் காட்டின உறுதியை நினைப்பது.

3 சாரித்ரேண ச கோ யுக்த: ஸர்வபூதேஷு கோ ஹித:?
வித்வாந் க: கஸ் ஸமர்த்தச் ச கச்சைகப்ரிய தர்சந:

7. சாரித்ரேண யுக்த:. சரித்ரமேவ சாரித்ரம்; அதாவது நல்லொழுக்கம். பெரியார்களைப் பணிதல், தந்தைதாய் பேணுதல், சாஸ்த்ரவிஹிதங்களை வழுவற அநுட்டித்தல், தெய்வபக்தியுடைமை, பிறரை நலியாமை, பிறர் பொருள் தாரமென்றிவற்றைக் கவர நெஞ்சாலும் நினையாமை—என்றினைய வொழுக்கங்களுக்குப் பொதுப்பட்டயான பெயர் சாரித்ரமென்பது. இவை யெல்லாம் இராமபிரான் பக்கலிலே எளிதாகக் காணக்கூடியவை.

8. ஸர்வபூதேஷு ஹித:. ப்ரியம் ஹிதம் என்னுமிரண்டில் தற்காலத்தில் இன்பம் தருமது ப்ரியமென்றும், தற்காலத்தில் அப்ரியமாயிருந்தாலும் உத்தரகாலத்தில் மிக நன்மை பயக்குமது ஹிதமென்றும் சொல்லப்படும். இராமபிரான் ஜீவரிகள் திறத்திலே செய்த காரியங்கள் அப்ரியமெனினும் ஹிதகோடியிலே எண்ணத்தக்கவை என்க. காகன் பக்கலிலே அபராதம் கண்ட பெருமாள் அவனை வதைக்க நினைத்தால் அநாயாஸமாக வதைக்கலாமாயிருந்தும் ப்ரஹ்மாஸ்த்ரம் தொடுத்தவிட்டது "த்ராதும் ந சக்தா யுதி ராமவத்யம்" என்னு முறுதியை உலகம் பரவச்செய்து மீண்டு மவனைக் காத்தருள்வதற்கே யன்றோ!

9. வித்வாந். உலகில் ஒன்றிரண்டு கலைகள் கற்றவரை வித்வானென்கிறோம். பெருமாள்படி அப்படியோ? "வேதவேதாங்கதத்வஜ்ஞ: சதுர்வேதே ச நிஷ்டித:. ஸர்வசாஸ்த்ரார்த்த தத்வஜ்ஞ: ஸ்ம்ருதிமாந் ப்ரதிபாநவாந்." என்று மேலே நாரதமஹர்ஷி விடை கூறும்படியன்றோ பெருமாளுடைய வைதுஷ்யம்.

10. ஸமர்த்த:. 'வித்வாந் க:' என்கிற வினவுக்கு அடுத்தபடி 'ஸமர்த்த: க:' என்னுமிவ்வினு தோன்றியிருப்பதனுல் வித்வத்து வேறு, ஸாமர்த்தியம் வேறு என்பது பெறப்படும். மேலே (அயோத்–1.) "லௌகிகே ஸமயாசாரே க்ருதகல்போ விசாரத:" என்று சொல்லுகிறபடியே லௌகிக ஸாமர்த்தியமும் விஞ்சியவர் பெருமாள்.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

11. ஏகப்ரியதர்சந:. எவ்வளவுகாலம் பார்த்துக்கொண்டிருந்தாலும் தெகுட்டாமல் இனிமையே செல்லும்படியான பார்வையை யுடையவர் பெருமாள். அரண்யவாஸிகளான முனிவர்களையும் கவரவல்ல அழகு படைத்தவர். "தருணௌ ரூபஸம்பந்நௌ" என்று வைரிகள் வாயாலும் வாழ்த்தவேண்டும்படியான ரூபலாவண்யமமைந்தவர்.

4 ஆத்மவாந் கோ ஜிதக்ரோதோ த்யுதிமாந் கோ நஸூயக:
கஸ்ய பிப்யதி தேவாச் ச ஜாதரோஷஸ்ய ஸம்யுகே.

12. ஆத்மவாந். ஆத்மாவையுடையவன் ஆத்மவாந். ஆத்மா என்னுஞ் சொல்லுக்கு வடமொழி நிகண்டுக்களில் ஐந்து பொருள்கள் கூறப்பட்டுள்ளன; "ஆத்மா ஜீவே த்ருதௌ தேஹே ஸ்வபாவே பரமாத்மநி" என்றது காண்க. த்ருதியாகிற தைர்யமுடைமையை இங்குக் கொள்ளலாம். "ஜய ஜய மஹாவீர!" என்றவுடனே "மஹாதீர தௌரேய" என்றும் 'அசபாயஸாஹஸ!' என்றும் போற்றத்தக்க தைரியமுடையவர் பெருமாள்.

13. ஜிதக்ரோத:. கோபத்தை வென்றவர் என்று பொருள். கோபமில்லாதவரென்று பொருளன்று. கோபத்தை வெல்லவதாவது அதனை ஸ்வாதீனப்படுத்தி வைத்துக் கொள்ளுகை. எப்போதும் கோபிஷ்டர்களாகவே யிருப்பதும், கோபம் அடியோடு இல்லாமலிருப்பதுமாகிய இரண்டும் தவறு. கோபத்தைக்காட்டிக் காரியங்கொள்ளவேண்டிய ஸமயங்களில் மட்டும் கோபத்தை வரவழைத்துக் கொள்வதும், காரியம் ஆனவாறே அக் கோபம் போனவிடம் தெரியாதபடி செய்து கொள்வதும் உத்தம புருஷ லக்ஷணம்.

14. த்யுதிமாந். த்யுதியாவது காந்தி; அதனை யுடையவர். கீழ் "ஏகப்ரியதர்சந: க:?" என்று வினா நிகழ்ந்திருக்கச் செய்தேயும் இங்கு 'த்யுதிமாந் க:?' என்று வினவியிருப்பதனால் இதில் ஒரு மருமமறியத்தக்கது. "வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்த் தோன்றி" என்கிறபடியே ஸூர்யகுலத்தில் அவதரித்த பெருமான் ராமதிவாகர: என்னும்படி தாமும் ஸூர்யனாயிருப்பதால் ஸூர்யன் ப்ரபையை விட்டுப் பிரியாதிருப்பதுபோல "ப்ரபாவாந் ஸீதயா தேவ்யா பரமவ்யோம பாஸ்கர:" என்கிறபடியே ப்ரபாஸ்தாநீயையான ஸீதா பிராட்டியைப் விட்டுப் பிரியாதவர் என்பது உட்பொருள். "அநந்யா ராகவேணாஹம் பாஸ்கரேண ப்ரபா யதா" என்றும் "அநந்யாஹி மயா ஸீதா பாஸ்கரேண ப்ரபா யதா" என்றும் திவ்யதம்பதிகளிருவரும் பேசும்படியான நித்யயோகமுடைமை.

15. அநஸூயக:. நற்றங்களையும் குற்றமாகக் கொள்ளுகைக் குறைப்பான துர்க்குணம் அஸூயை. அஃதில்லாமை—குற்றங்களையும் நற்றமாகக் கொள்ளுகை. ஆக வாத்ஸல்யமுடையவர் என்றதாகத் தேறும். "சரணாகத வத்ஸல:" என்றும் "ரிபூணாமபி வத்ஸல:" என்றும் போற்ற நின்றவர் பெருமான்.

16. கஸ்ய பிப்யதி தேவாச் ச ஜாதரோஷஸ்ய ஸம்யுகே. கீழ்ப்பதினைந்து வினாக்களும் முதல் வேற்றுமையில் நிகழ்ந்து, இவ்வினாமட்டும் ஆறும் வேற்றுமையில் நிகழ்வதை நோக்குமிடத்து "இதம் தே நாதபஸ்காய நாபக்தாய கதாசந. ந ச அசுச்ரூஷவே வாச்யம் ந ச மாம் யோப்யஸூயதி" என்ற கீதாச்லோகம் நினைவுக்கு வரும். சதுர்த்தீவிபக்தி நிர்தேச

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

முன்ன மூன்று பாதங்களிற் காட்டிலும் வேறுபட நான்காவது பாதம் ப்ரதமாவிபக்தி நிர்தேசத்தோடு கூடியிருக்கின்றதற்கு. அதைப்பற்றி நம் பாஷ்யகாரர் "அஸமாந விபக்தி நிர்தேச: தஸ்ய அத்யந்த பரிஹாரணீயதாஜ்ஞாபநாய" என்று அருளியிருக்கிறார். அதுபோல இங்கும் ஒரு விசேஷம் ஜ்ஞாபிதமாகவேணும்; கீழ் ப்ரஸ்தாவித்த பதினைந்து குணங்களும் ஒரு தட்டாய், இந்தப் பதினாறுவது குணம் மட்டும் ஒரு தட்டாயிருக்கை. போர்க்களத்தில் முன்னிற்கும்போது சீற்றத்தின் மிகுதியை நோக்கில் அநுகூலர்க்கும் அணுகவொண்ணாதபடியிருக்கையைச் சொல்லுகிறது. ராகவ ஸிம்ஹமன்றோ.

அஸங்க்யேய கல்யாணகுணகண நிதியாக ப்ரஸித்தனான பகவானிடத்தில் இப்பதினாறு திருக்குணங்கள் மட்டுமா வுள்ளனவென்று கேட்கலாகாது; சந்திரனை ஷோடசகலா பரிபூர்ணனென்னுமாபோலே ஸ்ரீராமசந்திரனை ஷோடச சுபகுண பரிபூர்ணனாகவைத்துப் பேசினபடி. மற்றுமுள்ள குணங்களுமெல்லாம் இவற்றினுள்ளே அடங்கியிருப்பனவாகக் கொள்க. [குறிப்பு;—இப்பதினாறு குணங்களையும் மிகமிக விவரித்து ஸ்ரீராமாயண கதைகளைப் பெரும்பாலும் இவற்றிலே பிணக்கி அபூர்வ ராமாயணமென்று நாமெழுதிய நூல் தமிழ், தெலுங்கு, ஸம்ஸ்க்ருதம்; ஆங்கிலம் ஆகிய நான்குபாஷைகளிலும் வெளிவந்துள்ளது.]

இங்கு முக்கியமாகக் குறிக்கொள்ளத்தக்கது

ஸ்ரீராமாயணம் வெறும் கதைநூலன்று; "வேதவேத்யே பரே பும்ஸி ஜாதே தசரதாத்மஜே வேத: ப்ராசேதஸாதாஸீத் ஸாக்ஷாத் ராமாயணாத்மநா" என்கையாலே வேதார்த்தங்களை உபப்ரும்ஹிக்கவே அவதரித்தமானது இது. இத்தகைய மஹாக்ரந்தத்தில் திருக்குணங்களைப்பற்றின வினாவே தலையாக அமைந்திருப்பதால் நிர்க்குணப்ரஹ்மவாதம் அடியறுக்கப்படுகின்றதென்றும் அது வேதபுருஷனுக்கு அநபிமதமென்றும் முக்கியமாக உணரவேணும். பரமபதத்தில் எம்பெருமான் தன்னுடைய பரத்வமொன்றையே காட்டமுடிகிறது. ஸௌலப்ய ஸௌசீல்ய க்ஷமா க்ஷாந்தி வாத்ஸல்யாதிகுணங்களை அங்குக் காட்ட முடிகிறதில்லை. ஏன்? அவற்றுக்கு விஷயபூதர் அங்கு ஒருவருமில்லாமையாலே. அத்திருக்குணங்கள் விலைச்செல்லவேண்டியே இவ்வுலகில் வந்து திருவவதரித்தது. "குணவரிவாஹாத் நாம ஜநநாழ" என்று பட்டர் அருளிச்செய்தது இதைக்கருதியே. ஆக, நிர்க்குண ப்ரஹ்மவாதிகளுக்கு ஸ்ரீராமாயணம் அநுகூலமாயிருக்க ப்ரஸக்தமில்லை; நிர்க்குணப்ரஹ்மவாதத்தை நெஞ்சிலும் நினையாதவர்களே ஸ்ரீராமாயணாதிகாரிகளென்று வால்மீகி நாரத மஹர்ஷிகளின் கருத்து.

5 ஏததிச்சாம்யஹம் ச்ரோதும் பரம் கௌதூஹலம்ஹி மே.
மஹர்ஷே! த்வம் ஸமர்த்தோஸி ஜ்ஞாது மேவம்விதம் நரம்.

இத்தகைய திருக்குணங்களுள்ளவரைச் சொல்லீர் என்னாதே 'ச்ரோதும் இச்சாமி' என்றது, ஏற்கெனவே தமக்கும் தெரிந்திருந்தாலும் "புருஷார்த்தோய மேவைகோ யத் கதாச்ரவணம் ஹரே:" என்ற கணக்கிலே காதுபடைத்தது ஸபலமாம்படி கேட்டுக்கொண்டேயிருப்பதில் குதூஹலமென்று காட்டுகிறபடி. இங்கு ச்ரோதும் என்றது மத்யமதீபந்யாயேந [காகாக்ஷிந்யாயேந] முன்னும் பின்னும் அந்வயிக்கும். 'ச்ரோதுமிச்சாமி' என்று முந்தின அந்வ

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

வயம்; 'ச்ரோதும்பாம் மே கௌதூஹலம்' என்று பிந்தின அந்வயம். கேட்கத்தான் எனக்கு ஆசை; சொல்லுவதைவிட கேட்பதுதான் சிறந்தது என்று தெரிவிக்கப்பட்டதாயிற்று. எல்லாருமே கேட்க ஆசைப்பட்டுவிட்டால் வக்தாவொருவர் வேணுமே. வக்தா இல்லாமல் கேட்பதெப்படி! வக்தாவாகைக்கு உரியவர் நாரதமஹர்ஷிதாம் என்று உத்தரார்த்தத்தினால் காட்டப்படுகிறது. [ஏவம்விதம் நரம் ஜ்ஞாதும் த்வம் ஸமர்த்தோஸி] ஒருவர் ஒன்றையறிந்து கொள்வதானது "ஸ்வாத்யாய ப்ரவசநேச" என்றகணக்கிலே பிறர்க்கு அறிவிப்பதற்காகவேயாதலால், இங்கு ஜ்ஞாதும் என்றது ஜ்ஞாபயிதும் என்ற பொருளையும் தரும். [ணிச் ப்ரத்யயம் மறைந்து கிடக்கிற தென்பர் வையாகரணர்.] ணிச்சு உள்ளவிடத்தில் அதற்கு அர்த்தமில்லாமற் போவதும், ணிச்சு இல்லாத விடத்தில் அதன் அர்த்தத்தைக் கொள்ளுதலும் சாஸ்த்ரஜ்ஞர்களுக்கு உடன்பாடென்க. ஆக, நாரத மஹர்ஷியே! ஜ்ஞாதாவும் ஜ்ஞாபயிதாவுமான தேவரீர் சொல்ல, அடியேன் கேட்க ஆசைப் படுகிறேனென்றதாயிற்று.

7. முநே! வக்ஷ்யாம்யஹம் புத்த்வா தைர்யுக்த: ச்ரூயதாம் நர:. இங்கு 'அஹம் புத்த்வா வக்ஷ்யாமி' என்றது பகவத்குண ரஸிகர்களுக்கே நிலமான வார்த்தை. புத்த்வா—தெரிந்து கொண்டு, வக்ஷ்யாமி—சொல்லுவேன், என்பதாகப் பொருள் தோன்றும். இனிமேல் யாரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளப் போகிறாரிவர். நான்முகக் கடவுளிடம் பல்கால் ஸ்ரீராம குணங்களைக் கேட்டு நெஞ்சில் தேக்கிக் கொண்டிருப்பவரிவர்; இக்கதையைச் சொல்லுவதற்கென்றே இவ்விடம் வந்தவருமாவர். அப்படிப் பட்டவர் 'இதோ சொல்லுகிறேன் கேளீர்' என்று சொல்லித் தொடங்க வேண்டியிருக்க, 'புத்த்வா வக்ஷ்யாமி' [தெரிந்து கொண்டு சொல்லுவேன்] என்றது என்ன கருத்தினால் என்று ஆராயப்பட வேண்டும். புத்த்வா என்பதற்கு தெரிந்து கொண்டு என்று அர்த்தமன்று. 'மோஹம் நீங்கி அறிவு பெற்ற பின்பு' என்பதே பொருள். வால்மீகே! நீர் ஏதோ சில குணங்களைக் கேட்கிற வியாஜத்தினாலே இராமனுடைய ஸகல கல்யாண குணங்களையும் நினைப்பூட்டி விட்டீர்; அந்த குணக்கடலில் அமிழ்ந்து கரைகாணமாட்டாதே மூர்ச்சித்துக் கிடக்கிற எனக்கு புத்தி ஸ்வாதீனமானாலன்றோ சொல்ல இயலும்; ப்ரக்ருதிஸ்தனன்றிக்கே "காலாழும் நெஞ்சழியும் கண் சுழலும்" என்று கிடக்கிற நான் ப்ரக்ருதிஸ்தனானவாறே ஆந்தனையும் சொல்ல முயல்கிறேனென்றதாயிற்று.

இங்கு ச்லோகங்கள் வரிசையாகக் காணப்பட்டாலும் "முநே! வக்ஷ்யாம்யஹம் புத்த்வா" என்ற பிறகு சில நாழிகைகளோ சில நாட்களோ நாரதர் பேசாதே கிடந்தாராக வேணும். திருவாய்மொழியில் நம்மாழ்வார் மூவாறுமாஸம் மோஹித்துக் கிடந்ததொக்கும்.

[தைர் யுக்த: ச்ரூயதாம் நர:] இங்கு நர: என்பது அநபேக்ஷிதம். கீழ் வால்மீகி ப்ரச்நத்தில் "ஜ்ஞாது மேவம்விதம் நரம்" என்றிருக்கையாலே மநுஷ்ய யோநியிற் பிறந்தவனைப் பற்றியே தெரிவிக்க ப்ராப்தமாகுமாதலால் [நர: ச்ரூயதாம்] என்னவேண்டாவே. ஆயினும் சொல்லியிருப்பதில் விளக்கும் மருமம் கேளீர். தசரதாத்மஜனாகத் திருவவதாரம் செய்தவன் ஸ்ரீமஹா விஷ்ணுவே யென்னுமிடம் ஸ்ரீராமாயணத்தில் அபலாபம் செய்யப் பட்டிருக்கவில்லை. [பால. 15.] * ஏதஸ்மிந்நந்தரே விஷ்ணுருபயாதோ மஹாத்யுதி:, சங்க சக்ரகதாபாணி: பீதவாஸா ஜகத்பதி:..................தத: பத்ம பலாசாக்ஷ: க்ருத்வா. ஆத்மாநம் சதுர்விதம், பிதரம் ரோசயாமாஸ ததா தசரதம் ந்ருபம் * இத்யாதி ச்லோகங்களைப்,

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

மேலே (அயோ. 1.) * ஸ ஹி தேவைருதீர்ணஸ்ய ராவணஸ்ய வதார்த்திபி:, அர்த்திதோ மாநுஷே லோகே ஜஜ்ஞே விஷ்ணுஸ் ஸநாதந: * இத்யாதி ச்லோகங்களாலும் ஸ்பஷ்டமாகவே அது தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆயினும் இராமபிரான் திருவுள்ளத்தால் விஷ்ணுத்வத்தில் வெறுப்பும் மநுஷ்யத்வத்தில் விருப்பும் காண்கிறது. ராவணவதாநந்தரம் தேவதாவர்க்கங்கள் வந்து கூடி "பவாந் நாராயணோ தேவ:" என்றது கடலோசையாய் "ஆத்மாநம் மாநுஷம் மந்யே ராமம் தசரதாத்மஜம்" என்பதே திடமுற்றதன்றே. இங்கு மந்யே என்பதற்கு 'பஹுமந்யே' என்னுமர்த்தம் நம் ஆசார்யர்களுக்கு அபிமதம். பகவத் கீதையில் "அபி சேத் ஸுதுராசாரோ பஜதே மாம் அநந்யபாக், ஸாதுரேவ ஸ மந்தவ்ய:" என்றவிடத்தில் 'மந்தவ்ய:' என்பதற்கு 'ஜ்ஞாதவ்ய:' என்று சங்கராசாரியர் பணித்த பொருளைத் தள்ளி ஸ்வாமி "பஹுமந்தவ்ய:" என்றருளியதை வழிகாட்டியாகக் கொண்டு இங்கும் மந்யே என்பதற்கு 'பஹுமந்யே' என்று பொருள் பணிப்பது அநவத்ய மென்னுமளவே யன்று, ரஸவத்தரமுமாகும். 'நான் உண்மையில் நாராயணனேயாயினும் மநுஷ்யத்வத்தில் தான் எனக்கு உகப்பு அதிகம்' என்று இராமபிரானே யன்றோ காட்டி நிற்கிறான். நடந்த கதைகளும் மநுஷ்யத்வத்திற்கேயன்றோ சாலப் பொருந்துவது. ஆகவே தான் விச்வாமித்ர முனிவன் மஹாஸதஸ்ஸிலே "வேதாஹ மேதம் புருஷம் மஹாந்தம்" என்ற ச்ருதிச் சாயையிலே "அஹம் வேத்மி மஹாத்மாநம்" என்று சொல்லி வைத்து, ஏகாந்தத்தில் திருப்பள்ளியுணர்த்தும்போது "உத்திஷ்ட நரசார்தூல!" என்றே ஸம்போதனம் பண்ணிற்று. வால்மீகிதாமும் பட்டாபிஷேகத்தைப் பேசுமிடத்திலும் "அப்யஷிஞ்சந் நரவ்யாக்ரம்" என்றன்றோ பணித்தது. "அப்யஷிஞ்சந் மஹா விஷ்ணும்" என்றால் சுலோகம் கூடாதோ? ஸ்ரீ ராமாயணத்தைக் குசலவர்கள் பாடப் பெருமாள் முகம் சுளிக்காமல் கேட்பதற்கு நரவ்யாக்ரம் என்பதே பொருத்தமாகுமென்றும் அறிந்தன்றோ அங்ஙனே பேசிற்று. ஆக, "ஸைர் யுக்த: ச்ரூயதாம் நர:" என்றவிடத்தில் நாரத மஹர்ஷியின் விவக்ஷிதம்—வால்மீகே! 'ஜ்ஞாதுமேவம்விதம் நரம்' என்று நீர் சொன்னது சுவைமிக்க வார்த்தை; உண்மையில் மநுஷ்யவ்யக்தியைப்பற்றியே சொல்லுகிறேனென்பதாம்.

8. இக்ஷ்வாகு வம்ச ப்ரபவ: என்று தொடங்கி, ஸத்யே தர்ம இவாபர: என்னுமளவும் பன்னிரண்டு சுலோகங்களில் பெருமாளுடைய திருக்குணங்களைப் பரக்கச் சொல்லி, (19) * தமேவம் குண ஸம்பந்நம் ராமம் ஸத்யபராக்ரமம்.....யௌவராஜ்யேந ஸம்யோக்துமைச்சத் ப்ரீத்யா மஹீபதி: * என்று தொடங்கி (89) * ராமஸ் ஸீதா மநுப்ராப்ய ராஜ்யம் புநரவாப்தவாந்* என்னுமளவும் மகுடாபிஷேக முயற்சி முதலாக, பட்டாபிஷேகத்தளவாக ராமாயண கதையை ஸம்க்ஷேபமாகச் சொல்லித் தலைக்கட்டி வான்மீகி முனிவரிடம் விடைபெற்றுக் கொண்டு தேவலோகம் சென்று சேர்ந்தார் நாரதமுனிவர். ஸம்க்ஷேப ராமாயணத்தில் சில ச்லோகங்களில் மட்டும் பொருட்சுவையை அநுபவித்துவிட்டு, பிறகு ஸ்ரீராமாயண சுலோகங்கள் பலவற்றிலும் அவகாஹிக்கக் கடவோம். .... *

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

23. ஸ ஸத்யவசநாத் ராஜா தர்மபாசேந ஸம்யத:,
விவாஸயாமாஸ ஸுதம் ராமம் தசரத: ப்ரியம்.

சக்ரவர்த்தி தன்னுடைய ப்ரிய புத்ரனைக் காட்டுக்குப் போகவிட்டானென்று சொல்லுமிவ்விடத்தில் ஸத்யவசநாத் என்கிற ஹேதுநிர்தேச மொன்றே போதும். 'தர்மபாசேந ஸம்யத:' என்கிற ஹேதுகர்ப்ப விசேஷணமுமிட்டது ஒரு சாஸ்த்ரார்த்தத்தைத் தெரிவிக்கைக்காகவாம். அதாவது, வியாகரணத்தில் "யாப்யே பாசப்" என்றொரு ஸூத்ரம். குத்ஸித: பிஷக்-பிஷக்பாச: என்பது இதற்கு உதாஹரணம். அதுபோல தர்மபாச மென்றது குத்ஸித தர்ம மென்றபடி; தர்மாபாஸ மென்றதாகத் தேறும். கைகேயியின் வரப்ரார்த்தனைக்குக் கட்டுப்பட்டு மன்னவன் மகனைக் காட்டுக்குப் போகவிட்டதாகக் கதை. கைகேயிக்கு அவன் வரங் கொடுத்திருந்தது எந்த யுகாந்தரத்திலோ தெரியாது. இன்னவிதமான வரம் என்று குறிப்பிடப்பட்டிருக்கவுமில்லை. அதுகிடக்க, இவ்வரசன் இராமனைத் தானாக வரவழைத்து 'நாளை உனக்கு மகுடாபிஷேகம்' என்று பலகால் சொன்னது நாடு நகரமும் நன்கறிந்தது. இங்ஙனே சொன்னதைத் தவறினவன் ஸத்யவாதியாக எங்ஙனம் ஆகமுடியும்? இங்கு முக்கியமான விஷயம் ஒன்றே.* ராமோ விக்ரஹவாந் தர்ம:* என்று வடிவெடுத்த ஸித்த தர்மமாகச் சொல்லப்பட்ட இராம பிரானோடு கூடி வாழ்வதை விட்டு ஆபாஸ தருமமான ஸத்ய வசனத்தைத் தயரதன் பற்றி நின்றது அவனுக்கு அவத்யமாகவே சொல்லப்பட்டுள்ளது. முமுக்ஷுப்படியில் சரமச்லோகப்ரகரணத்தில் "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய" என்ற விடத்தில் பிள்ளை லோகாசார்யர் அருளிச் செய்துள்ள ஸ்ரீ ஸூக்தி "சக்ரவர்த்தியைப் போலே இழக்கைக் குறுப்பு" என்பதாம். இங்கு மணவாள மாமுனிகளின் வியாக்யான ஸ்ரீ ஸூக்தி வருமாறு "முன்பே வரப்ரதானத்தைப் பண்ணி வைத்து இப்போதாக மறுக்க வொண்ணாதென்று ஆபாஸமான ஸத்ய தர்மத்தைப் பற்றிநின்று *ராமோ விக்ரஹவாந் தர்ம:* என்கிற பெருமாளோடே கூடி வாழவிருந்த பேற்றையிழந்த சக்ரவர்த்தியைப் போலே..." என்று. இங்ஙனே ஆசாரியர்கள் நிர்வஹிப்பதற்கு மூலமாகவே இங்கு தர்மபாசேந ஸம்யத:* என்றமைந்தது.

24. ஸ ஜகாம வநம் வீர: ப்ரதிஜ்ஞாமநுபாலயந்,
பிதுர்வசந நிர்தேசாத் கைகேய்யா: ப்ரியகாரணாத்.

பெருமாள் காட்டுக்கெழுந்தருளினதற்கு இரண்டு காரணங்கள் இங்குச் சொல்லப்படுகின்றன. இரண்டும் முக்கிய காரணமென்று கருதலாகாது. முற்படச் சொன்ன *பிதுர்வசந நிர்தேசாத்* என்னுங்காரணமே ப்ரபலமானது. ஸ்ரீ ராம லக்ஷ்மண பரத சத்ருக்னர்களென்கிற நான்கு திருமூர்த்திகளாகத் திருவவதரித்ததற்குக் காரணமருளிச் செய்யும் நம் ஆசார்யர்கள், பெரியவர் சொல்லிற்றைச் சிறியவர் செய்வதென்கிற ஸாமாந்ய தர்மத்தை அநுஷ்டித்தார் பெருமாள்; சேஷி விஷயத்தில் சேஷத்வமே ஸ்வரூபமென்கிற விசேஷ தர்மத்தை ஆசரித்துக் காட்டினார் இளையபெருமாள்; அது தன்னிலும் மிகச் சிறந்த பாரதந்திரியத்தை யநுஷ்டித்துக் காட்டினார் பரதாழ்வான், பாகவத சேஷத்வமே பரமதர்ம மென்பதை ஸ்வாநுஷ்டாந முகத்தாலே காட்டினான் சத்ருக்நாழ்வான் என்றருளிச் செய்து, பெருமாள் அநுஷ்டித்த ஸாமாந்ய தர்மத்தை முதலிக்குமிடத்து, *பிதுர்வசந நிர்தேசாத்—விச்வாமித்ரஸ்ய சாஸநாத்—அகஸ்த்ய வசநாத் — பரத்வாஜஸ்ய சாஸநாத்*. இத்தியாதி ப்ரமாணங்களைக் காட்டியருளுகிறார்கள். பெருமான் செய்திருக்கிற காரியமெல்லாம் பெரியாருடைய நியமனத்தைச் சிரமேற்கொண்டே செய்ததாகக் காண்கிறது. முதற் காரியமான தாடகாவதத்தை யெடுத்துக்கொள்வோம். பெண் கொலை பெரும்பாதகமென்று உலகம் பகரும். இஃது இராமபிரானறியமாட்டாத தன்றே. அறிந்திருந்தும் இதனைச் செய்தது [விச்வாமித்ரஸ்ய சாஸநாத்.] சிலர் சொல்லுவதுண்டு

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

சூர்ப்பணகைக்குச் செய்வித்த அங்கபங்கத்தைத் தாடகைக்குச் செய்திட்டு சூர்ப்பணகையை முடித்திருக்கலாமே. அவளை உயிரோடு விட்டதனலல்லவோ அவள் இலங்கைக் கேகி இராவணனைத் தூண்டி ஸீதாபஹரணம் முதலிய கஷ்டங்களை விளைத்தனள்; அவளுயிரையே மாய்த்திருந்தால் ஒரு வருத்தமுமில்லையே என்று. இது வாஸ்தவமே. தாடகையை வதை செய்யுமாறு நியமிக்க அங்கு ஒரு முனிவர் இருந்தது போல, பஞ்சவடியில் சூர்ப்பணகையை வதை செய்யுமாறு நியமிக்க ஒரு முனிவர் வந்து நிற்கவில்லையே. இனி முடிவில் செல்வோம். ராவண ஸம்ஹாரமான பின்பு விபீஷணாழ்வான் பெருமாளை அங்குச் சில நாள் தங்கி இருந்து விச்ரமிக்குமாறு வேண்ட "ந மே ஸ்நாநம் பஹுமதம் வஸ்த்ராண்யாபரணாநி ச, தம் விநா கைகயீ புத்ரம் பரதம் தர்ம சாரிணம்" என்று சொல்லி உடனே புஷ்பகவிமானத்திலேறி அயோத்திக்குப் புறப்பட்டார். பரதாழ்வானுடைய துடிப்பையும் மறந்து பரத்வாஜாச்ரமத்திலே போஜனத்திற்கு இசையகலப் பாரித்தார். இது எதனலென்ன. பரத்வாஜஸ்ய சாஸநாத். ஆக ப்ரக்ருதத்தில் "கைகேய்யா: ப்ரிய காரணாத்" என்றது அமுக்கிய ஹேதுவாப் "பிதுர்வசந நிர்தேசாத்" என்றதே ப்ரதாந மாகக் கடவது. ... ... *

25. தம் வ்ரஜந்தம் ப்ரியோ ப்ராதா லக்ஷ்மணோநுஜகாம ஹ.

28. ஸீதாப்ய நுகதா ராமம் சசிநம் ரோஹிணீயதா.

இங்கு பெருமாளோடு கூட இளைய பெருமாள் முன்னம் புறப்பட்டதாகவும், பிராட்டி பின்பு புறப்பட்டதாகவும் சொல்லிற்று. மேலே அயோத்யா காண்டத்தில் நிகழ்ச்சியை விரிவாகச் சொல்லுமிடத்து, முற்படப் பிராட்டியும், பிறகு இளைய பெருமாளும் உடன்வர வேண்டிக்கொண்டதாகச் சொல்லப்படுகிறது. இதில் விரோத சங்கை வேண்டா; இவ்விருவரும் பெருமாளுக்கு அநுசரர்களாயினர் என்பதே இங்கு விவக்ஷிதமாகக் கொள்க. வேறுவிதமு முண்டு, அதை மேலே சொல்லுவோம். ... ...

29. குஹமாஸாத்ய தர்மாத்மா நிஷாதாதிபதிம் ப்ரியம்.
குஹேந ஸஹிதோ ராமோ லக்ஷ்மணேநச ஸீதயா.

அவாப்த ஸமஸ்த காமனுன எம்பெருமான் இவ்விருள் தருமா ஞாலத்திலே வந்து அவதரிக்கைக்கு ஹேதுவை ஸ்ரீகீதையில்*பரித்ராணாய ஸாதூநாமித்யாதி ச்லோகம் சொல்லி வைத்தது. அதை மேலெழப் பாராதே உட்புகுந்து ஆர அமரப் படிந்து குடைந்து மருமத்தை யுணர்ந்த ஆழ்வார்களின் திருவுள்ளத்தை யறிந்த ஆசாரியர்களில் தலைவரான கூரத்தாழ்வான் "ஆச்ரிதஜநாந் ஸமாச்லேஷ்டும் அவதரஸி" என்று அற்புதமாக வருளிச்செய்தார். அவனைக் காணவும் கண்டு தொழவும் தழுவவும் பேசவுமாசை கொண்டிருக்கின்ற ஸம்ஸாரிகளின் விடாயைத் தீர்ப்பது ஒரு புறமிருக்க, இவர்களோடு கலந்து பரிமாறித் தன் விடாயைத் தீர்த்துக்கொள்ளவே பகவான் இங்கு வந்து அவதரிக்கிறன் என்பது மேலெடுத்த ஆழ்வான் ஸ்ரீஸூக்தியின் கருத்து. இதில் சிலருடையவோ பலருடையவோ மனம் விப்ரதிபத்தி கொண்டேயிருக்கும். அந்த விப்ரதிபத்தியைத் தீர்க்குமிடங்கள் ஸ்ரீராமாயணத்தில் பலவுண்டு; அவற்றில் தலையானது இவ்விடமென்று கொள்க. இங்கு *குஹேநஸஹிதோராம:* என்பதனல் பெருமாள் குஹனோடு கூடினரென்று சொல்லிற்று. இவ்வளவுதான் இங்குச் சொல்ல வேண்டுவது; ஆனல் இவ்வளவோடு நிற்கவில்லை; [லக்ஷ்மணேந ச ஸீதயா] என்றும் சொல்லிற்று. குஹனோடு கூடினவளவேயன்று, இளையபெருமாளோடுங் கூடினர், பிராட்டியோடுங் கூடினர் என்றது. பெருமாளோடுகூட இவ்விருவரும் பின்தொடர்ந்து வந்தார்கள் என்று கீழே சொல்லியாயிற்று. மீண்டுமிங்குச் சொல்வது சர்வித சர்வணமேயாகும். கவிஸார்வபௌம

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ருடைய கவிதைக்கு இக்கொத்தை கூடாது. இங்கு நம்பிள்ளையருளிச்செய்யும் பொருளாவது. பெருமான் குஹனோடு சேர்ந்தபின்பே தம்பியோடும் தேவியோடும் சேர்ந்ததாகத் திருவுள்ளம் பற்றினரென்று. இதை நிலைநாட்டும் ஸ்தலமொன்று காட்டுவோம். *குஹேந ஸஹிதோ ராம:* என்றது மஹர்ஷியின் வாக்யமேயொழியப் பெருமாளுடைய வாக்கியமன்று. பெருமாளுடைய வாக்கியமே கேளீர்:

மேலே ஆரண்யகாண்டத்தில் (19–40) * கதா நு அஹம் ஸமேஷ்யாமி பரதேந மஹாத்மநா, சத்ருக்நேந ச வீரேண த்வயா ச ரகுநந்தந!* என்பது பெருமாளுடைய திருவாக்கு. சித்திரகூடமலைச்சாரலிலே வந்து அமுதமன்ன மென்மொழிகளைச் சொல்லி அகங்குழையச் செய்து திரும்பிப்போன பரதாழ்வானையே நினைந்து நைந்து உள்கரைந்துருகா நின்ற பெருமான் இளையோனை நோக்கிச் சொல்லுகிற மேற்குறித்த வார்த்தையில் "பரதனோடும் சத்ருக்நனோடும் நான் மறுபடியும் எப்போது கூடுவேன்!" என்றது யுக்தம்; இதற்குமேல் [நான்காவது பாதத்தில்] சொல்லுவதாவது, உன்னோடும் எப்போது கூடுவேன்? என்று. பிரிந்திருப்பவர்களோடு எப்போது கூடுவேனென்பது ஸம்பாவிதம்; கூடியே யிருப்பவனோடு எப்போது கூடுவேனென்பது ஸம்பாவிதமோ? மதி கலங்கிச் சொல்லுகிற வார்த்தை போலல்லவோ தோன்றும். "த்வயா ச ரகுநந்தந!" என்ற விடத்துள்ள சகாரத்தை அநுக்தஸமுச்சாயகமாக வைத்து, உன்னோடும் பிராட்டியோடும் எப்போது கூடுவேன்? என்பதாக வுரைத்து "பரதாழ்வானோடு கூடியிராமையாலே, கூடியிருக்கின்ற ஸீதாலக்ஷ்மணர்களின் ஸாஹித்யமும் அஸத்கல்பமாகத் தோற்றுகையாலே இங்ஙனே சொல்லலாயிற்று" என்று வியாக்யானம் செய்தருளினர்கள். இதனால், அடியார்களோடு கலந்து பரிமாறிக் களிப்பதில் எம்பெருமானுக்குள்ள அவா அபரிமிதமென்பது தெரியவரும். இந்த அவாவைத் தீர்த்துக்கொள்வதற்கே அவதாரம் செய்தருள்வதாக ஆழ்வானருளிச்செய்ததில் அதிசயோக்தி யொன்றுமில்லை. ... ... •

30. தே வநேந வநம் கத்வா.

இங்கு தே, என்றும் வநேந என்றும் இரண்டு பதமாகப் பிரித்து இடையில் க்ரமமோ நகரமோ ஏதுமின்றிக்கே அடுத்தடுத்து வநபரம்பரைகளை யிருந்தனவாகச் சொல்லுவது ஒரு பொருள். இங்ஙனன்றிக்கே (தேவநேந) என்று ஒரு முழுச்சொல்லாகக் கொண்டு, தேவநம் என்பதற்குப் பாதசாரமென்று பொருளாகையாலே காலால் நடந்து சென்றமையைக் கூறுவதாகவும் வியாக்கியானமுள்ளது. ... ... •

31. ரம்யமாவஸதம் க்ருத்வா ரமமாணா வநே த்ரய:.

இங்கு த்ரய; என்றது ராமலக்ஷ்மணஸீதைகளை. 'த்ரய: ரமமாணா:' என்று மூவரும் ஆனந்தமடைந்ததாகச் சொல்லப்படுகிறவிதில் ஒரு சங்கை; பெருமாளுக்கும் பிராட்டிக்கும் பரஸ்பரஸம்ச்லேஷத்தாலே ஆனந்தமுண்டாவது ப்ராப்தம். இளையபெருமாள் த்வாரபாலகராயிருக்குமத்தனையே யன்றோ உள்ளது. "ஸேவா ச்வவ்ருத்தி:" என்று இழித்துரைக்கப்பட்ட வ்ருத்தியிலிருக்கின்ற அவர்க்கு ஆனந்த ப்ரஸக்தி ஏது? 'த்ரய: ரமமாணா:' என்று எப்படிச் சொல்லலாமென்று. கேண்மின். ஆனந்த மென்பது ஒருவகைப்பட்டதன்று, இன்பமோ துன்பமோ அவரவர்களின் புத்தி பேதத்தாலே வெவ்வேறு பட்டிருக்கும். இருவருமான சேர்த்தியிலே அடிமை செய்கையினால் இளையபெருமாள் அடையும் ஆனந்தம் திவ்யதம்பதிகளின் ஆனந்தத்திற் குறைந்ததன்று. லௌகிகத்தில் ஒரு சிறிய த்ருஷ்டாந்தம் கேண்மின். சிலர் பாயஸ பக்ஷ்யாதிகளை யருந்தி யடையுமானந்தத்தைச் சிலர் சாறும் மோருமருந்தி யடையக் காண்கிறோம். ஆயிரமும் பதினாயிரமும் பெற்று மஹாதனிகர்களடையு மானந்தத்தை, பத்து

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

மிருப்பதும் பெற்று அகிஞ்சனனடையக் காண்கிறோம். ஆகவே அடிமை செய்ய வந்த இளையோனுக்கு என்ன ஆனந்தமென்று கேட்கலாகாது. *என்னெஞ்சினால் நோக்கிக் காணீர்* என்ற கணக்கிலே அவரவர்களது நெஞ்சினால் பார்த்தன்றோ ஆனந்த பேதங்களை யறியவேணும். ஆக "ரமமாணு வநே த்ரய:" என்றதில் ஒரு குறையுமில்லை. ஆனந்த தாரதம்யவாதிகளென்று சில மதஸ்தர்களுள்ளார்கள். பகவத் ராமாநுஜ தர்சனஸ்தர்களான நம் அந்த வாதமுடையோமல்லோம். அதற்கு இந்த ச்லோகமும் ஒரு ப்ரமாணமாகும். ... ... *

38. ஸ காம மநவாப்யைவ ராமபாதாவுபஸ்ப்ருசந்
நந்திக்ராமே அகரோத் ராஜ்யம் ராமாகமநகாங்க்ஷயா.

பரதாழ்வான் தன்னுடைய மனோரதம் நிறைவேறப் பெறாமலே திரும்பிவிட்டதாக இதில் தெரிவிக்கப்படுகிறது. மேலே அயோத்தியா காண்டத்திலே (113-1) * ஆருரோஹ ரதம் ஹ்ருஷ்ட: சத்ருக்நேந ஸமந்வித:* என்று ஸந்துஷ்டனாய்த் திரும்பியதாகச் சொல்லப்படுகிறது. மனோரதம் நிறைவேறப் பெறாதவனுக்கு ஸந்தோஷம் எப்படி உண்டாகுமென்று சங்கிக்க நேரிடும். மனோரதம் நிறைவேறப் பெறாததும் உண்மை; ஸந்தோஷமுண்டானதும் உண்மை. எங்ஙனே யென்னில்; பெருமாளை மீட்டுத் திருவயோத்தியிலெழுந்தருளப் பண்ணித் திருவபிஷேகம் செய்விக்க வேணுமென்கிற மநோரதமும் நிறைவேறவில்லை; இளைய பெருமாளைப் போலே தானும் அநுசரிக்கராய்ச் செல்ல வேணுமென்கிற மனோரதமும் நிறைவேறவில்லை. ஆக (ஸ காம மநவாப்யைவ) என்றது பொருந்திற்று. இனி "ஆருரோஹ ரதம் ஹ்ருஷ்ட:" என்னும்படியான ஹர்ஷம் எங்ஙனே யென்னில்; இளைய பெருமாளிடத்தில் சேஷத்வம்" மட்டுமிருந்ததேயொழிய அதிலுங் காட்டில் மிகச் சிறந்ததான பாரதந்திரியம் இருந்ததில்லை. அயோத்தியிலேயே யிருந்து தாய் தந்தையர்க்கு சுச்ரூஷை செய்துகொண்டிருக்கும்படி பன்முறையும் நியமித்தும் அதற்கிணங்கவில்லையென்று ஸுப்ரஸித்தம். அடிமை செய்ய வேணுமென்கிற ஆசை மட்டுமிருந்ததே யொழிய சேஷியுகந்த அடிமையே செய்ய வேணுமென்கிற ஸ்வரூபஜ்ஞான பூர்த்தி இளையோனிடம் அமையவில்லை. "சேஷத்வபோக்த்ருத்வங்கள் போலன்றே பாரதந்த்ர்ய போக்யதைகள்" என்கிற ஆசார்ய ஹ்ருதய சூர்ணையினால் பாரதந்திரியத்தின் சிறப்பு உணரத்தக்கது. திருப்பாணாழ்வார்க்கு முநிவாஹநரென்று திருநாமம். லோகஸாரங்க மஹா முனிகள் தம் தோளின் மீது ஏறி யெழுந்தருளவேணுமென்று பாண்பெருமாளைப் பிரார்த்தித்தபோது அவர் அதற்கு இசையலாமோ? அவரோ உத்தமாச்ரமி; இவரோ நைச்யம் பாவிக்க வேண்டாதே இயற்கையான நைச்யமுடையவர். இப்படிப்பட்டவர் இருய்த்து ஓடவேண்டியிருக்க அவர் திருத்தோளிலே ஏறி வீற்றிருந்தது அசித்தோடொக்கும் பாரதந்திரியத்தை யநுஸந்தித்ததனாலன்றோ. இதனை அவ்வாழ்வார் தாமே "அடியார்க்கென்னையாட்படுத்த விமலன்" என்று பாசுரத்தின் முகப்பிலும் பொறித்து வைத்தாரன்றோ. பரதாழ்வான் பாரதந்த்ரியஸித்தியைப் பெறாப்பேறாகக் கொண்டு ஹ்ருஷ்டரானாரென்பது மிகப் பொருத்தம். தமக்கு ராஜ்யாதிபத்யம் கிடைத்துவிட்டதனால் ஹ்ருஷ்டரானாரென்று சிலர் பொருள்கூறுவது பரதாழ்வான்படிக்குச் சிறிதும் ஏலாதது. "அரசமர்ந்தானடி சூடு மரசையல்லால் அரசாக வெண்ணேன் மற்றரசு தானே" என்ற குலசேகராழ்வார் அருளிச் செயலின்படி ஸ்வரூபாநுரூபமான ராஜ்யம் கிடைத்தது பற்றி ஹ்ருஷ்ட ரானாரென்கை மிகவும் உசிதம்.

41. ப்ரவிச்ய து மஹாரண்யம் ராமோ ராஜீவ லோசந:
விராதம் ராக்ஷஸம் ஹத்வா சரபங்கம் ததர்ச ஹ.

பெருமாள் சித்திரகூடத்திலிருந்து புறப்பட்டுத் தண்டகாரணியம் புகுந்தாரென்று கீழே சொல்லிற்று. இங்கே "ப்ரவிச்ய ஸ மஹாரண்யம்" என்று சொல்லலாம், து என்பதைப்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ப்ரயோகித்தது சாஸ்த்ரரீதியிலே அர்த்த புஷ்கலம்– முன்னிருந்த விருப்பில் வ்யாவ்ருத்திவைக்
காட்டும் துகாரம். அந்த வ்யாவ்ருத்திவை ராஜீவலோசந: என்கிற விசேஷணபதம் மிகவும்
விசதமாக்குகின்றது. 'ராஜீவலோசந:' என்று இராமபிரானுக்கு விசேஷணமிடுவது
ஸ்ரீராமாயணத்தில் பலவிடங்களிலும் காணப்படும். இது ஸ்வபாவோக்தியென்று கருதலாகாது.
ஒவ்வோரிடத்தில் ஒவ்வொரு விதமான கருத்தைத் தந்து இன்சுவை பயக்கும். மேலே (20-2)
"ஊநஷோடசவர்ஷோ மே ராமோ ராஜீவலோசந:" என்ற விடத்திலே அற்புதமான கருத்
தைக் கொண்டது இச் சொல். நிசாசரர்களை யழித்து வேள்வியைக் காக்க இராமனைத் தம்மோடு
அனுப்பவேணுமென்று வேண்டிக்கொண்ட விச்வாமித்ர முனிவர்க்குத் தசரதன் விடைகூறு
மிந்த ச்லோகத்தில் ராஜீவலோசந; என்றது—முனிவரே! உம்முடைய வேள்விக்கு இடையூறு
செய்யும் அரக்கர்களோ நிசாசரர்கள் – இரவிலே வந்து நலிபவர்கள்; என்னுடைய ராமனோ
அஸ்தமித்தவாறே கண்ணுறங்குபவன்: இவன் கண் விழித்திருந்து அந்த நிசாசரர்களோடு எப்படி
போர்புரியமுடியும்? என்னுங் கருத்துக்கொண்டது. ராஜீவமாவது தாமரை; அது ஸூர்யன்
அஸ்தமித்தவாறே எப்படி மூடிக்கொள்ளுமோ அப்படி கண்மூடு மியல்புடையவன் ராமன்
என்று காட்டின படி. "ப்ரவிச்ய து மஹாரண்யம் ராமோ ராஜீவ லோசந:" என்கிற ப்ரக்ருத
ஸ்தலத்திலோ வென்னில், இப்போது இருபத்தைந்தாம் பிராயத்திலே யிருக்கிற ராகவனுக்கு
அப்பொருள் சொல்லவொண்ணாது. பின்னையோ வென்னில், அயோத்யா காண்டத்தில் வன
வாஸக் கட்டளை விளைந்த பின்பு இளையோனை நோக்கிப் பெருமாள் சொல்லுகையில் (22–29.)
"மா ச லக்ஷ்மண! ஸந்தாபம் கார்ஷீர் லக்ஷ்ம்யா விபர்யயே, ராஜ்யம் வா வநவாஸோ வா வந
வாஸோ மஹோதய:" என்றார். இளையா! ராஜ்யலக்ஷ்மியை இழக்க நேர்ந்துவிட்டதே யென்று
வருத்தங்கொள்ளாதே; ராஜ்யம் கிடைத்தாலென்ன? வனவாஸம் கிடைத்தாலென்ன?
இரண்டும் நமக்குத் துல்யந்தான் என்று முதலில் சொல்லிவிட்டு, உடனே, சிறிது விமர்சித்துப்
பார்க்கில் இரண்டையும் துல்யமாக நினைக்கவே தகாது, வனவாஸம் நமக்குப் பெரும் பேறு
காண் என்றார்... அது மனமாரச் சொன்னதாயிருக்குமோ வென்கிற சங்கைக்கு இடமறும்படி
மஹாரண்ய ப்ரவேசம் ப்ராப்தமானபோதே உள்ளே பொங்குகிற ஹர்ஷம் கண்ணிலே தொடை
கொள்ளலாம்படியாயிற்றென்கிறது ராஜீவலோசந: என்பது. மஹர்ஷிகளின் பாத ஸேவையும்
அவர்களின் விரோதி நிரஸநமுமாகிற மஹாபாக்யம் ப்ராப்தமாகிறதே யென்று திருக்கண்கள்
மலர்ந்தபடி. [விராதம் ராக்ஷஸம் ஹத்வா சரபங்கம் ததர்ச ஹ.] இது "பாணிபாதம் ப்ரக்ஷாள்ய
ஆசம்ய" போலே அமைந்தது. ஆசமனத்திற்குப் பாணிபாத ப்ரக்ஷாளனம் அங்கமானாற்போலே
சரபங்க மஹர்ஷிதர்சனத்திற்கு விராதஹநநம் அங்காநுஷ்டானம் போலும். "ரிக்தஹஸ்தஸ்
து நோபேயாத் ராஜாநம் தைவதம் குரும்" ஆகையாலே சரபங்கமஹரிஷியைக் காண விராத
ப்ரேதத்தைக் காணிக்கையாகக் கொண்டார்போலும். ... ...

43. வஸதஸ் தஸ்ய ராமஸ்ய வநே வநசரைஸ் ஸஹ,
ருஷயோப்யாகமந் ஸர்வே வதாயாஸுர ரக்ஷஸாம்.

45. ப்ரதிஜ்ஞாதச் ச ராமேண வதஸ் ஸம்யதி ரக்ஷஸாம்.

பெருமாள் தண்டகாரணியத்தி லெழுந்தருளியிருக்கும்போது மஹர்ஷிகள் வந்து
ராக்ஷஸர்களை வதம் செய்யவேணுமென்று சரணாகதி செய்ததாகவும், பெருமாள் அப்படியே
வதம் செய்வதாக ப்ரதிஜ்ஞை பண்ணினதாகவும் இங்குச் சொல்லப்படுகிறது. ஏற்கெனவே
திருவவதாரத்திற்கு முன்பு தேவதைகள் ராவணனை வதம் செய்யவேணுமென்று பிரார்த்தித்த
தாகவும் * ஸ ஹி தேவைருதீர்ணஸ்ய ராவணஸ்ய வதார்த்திபி:, அர்த்திதோ மாநுஷே லோகே
ஜஜ்ஞே விஷ்ணுஸ் ஸநாதந: * (அயோ 1—7.) என்கிற ச்லோகம் காட்டுகின்றது. தேவர்களோ
தங்களைக் காப்பாற்றும்படி பிரார்த்திப்பது யுக்தமேயல்லது பிறரை வதம் செய்ய
மஹர்ஷிகளோ வேணுமென்று இதையும் வாய்விட்டுப் பிரார்த்திக்கலாமா? பிறரால் தங்களுக்கு நலிவு

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஏற்படாதபடி செய்தருளப் பிரார்த்திப்பதன்றோ அழகியது. மேல் ஆரண்ய காண்டத்தில் "தே வயம் பவதா ரக்ஷ்யா:" என்றும், •ரக்ஷிதவ்யாஸ் த்வயா சச்வத் கர்ப்பபூதாஸ் தபோதநா:• என்றும் சொன்னாப்போலே பிறருடைய வதத்தை ப்ரஸ்தாவியாமல் தங்களுடைய ரக்ஷணத்தை மட்டும் ப்ரார்த்தித்தால் போராதா? பெருமாளும் அப்படியே உங்களை ரக்ஷிக்கிறே னென்று வாக்தானம் செய்தால் போதுமே.• ப்ரதிஜ்ஞாதச் ச ராமேண வதஸ் ஸம்யதி ரக்ஷஸாம்* என்னும்படி வதஞ் செய்துவிடுகிறேனென்று சொல்லியிருக்க வேண்டாவே. பிறரை வதஞ் செய்யாமல் தேவர்களையும் மஹர்ஷிகளையும் ரக்ஷிக்கத் திருவுள்ளம் பற்றினால். ஸர்வசக்தனான பகவானுக்கு இது ஆகாத காரியமன்றே. என்றிங்ஙனே சிலர் கேள்விகள் கேட்பதுண்டு. * தேவாநாம் தாநவாநாஞ்ச ஸாமாந்ய மதி தைவதம் * என்றும் * ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம் * என்றும் * ஸமோஹம் ஸர்வ பூதேஷு * என்றும் ப்ரஸித்தி பெற்றிருக்கிற பகவான் வதம் செய்துவிடுவதாக ப்ரதிஜ்ஞை பண்ணுவதன் கருத்து யாதெனில், ஆந்தனையும் பார்த்து வதமே செய்யவேண்டி வந்தால் செய்வதாக வத்தனை. தேவர்களும் ரிஷிகளும் வதப்ரார்த்தனை பண்ணினது அரக்கர்களால் தங்களுக்கு நேர்ந்த பொறுக்கவொண்ணாத துன்பமிகுதியைக் காட்டி நிற்குமத்தனை. "ஹந்யாமஹமிமாம் பாபாம் கைகேயீம் துஷ்ட சாரிணீம்" என்று பரதாழ்வான் தாயை வதம் செய்து விடுவதாகச் சொன்னது தன்னுடைய அஸஹ்ய வேதனையைக் காட்டுமத்தனை யொழிய வேறில்லையே, (அயோ. 96-24.) "பரதோ வத்ய ஏவ மே. பரதஸ்ய வதே தோஷம் நாஹம் பச்யாமி ராகவ." என்று சித்ரகூடத்தில் பெருமானை நோக்கி இளைய பெருமாள் சொன்னதும் இந்த ரீதியில் தானே பொருளைத் தந்து நிற்கும். ஹரிஷ்யாமி ஸபாந்தவம் • என்று ஸுக்ரீவ மஹாராஜர்க்குப் பெருமாள் சொல்லி யனுப்பினதும் இக்கருத்தில்தானே. •வத்யதாமேஷ தீவ்ரேண தண்டேந ஸசிவைஸ் ஸஹ * என்று சரணாகதனான விபீஷணாழ்வான் விஷயத்திலே ஸுக்ரீவ மஹாராஜர் சொன்னதும் ஸம்ரம்பாதிசயத்தைக் காட்டுவதில் மட்டுமேயன்றோ விச்ராந்தம். • மயைவைதே நிஹதா: பூர்வமேவ• என்று கீதாசார்யன் சொன்னதும் இங்கு நினைக்கத்தக்கது. ... ...

56. ஸ சாஸ்ய கதயாமாஸ சபரீம் தர்மசாரிணீம்
ச்ரமணீம் தர்மநிபுணாமபிகச்சேதி ராகவம்.

தநுகபந்தனுடைய வார்த்தையான இதில் சபரியை தர்மசாரிணி யென்றும் தர்மநிபுணா என்றும் விசேஷித்திருக்கிறது. இங்கு விவக்ஷிதமான தர்மம் எதுவென்று பார்க்குமளவில் ஆசார்ய சுச்ருஷை, ஆசார்யாபிமானம் எனப்படும் உத்தமோத்தமதருமமே யென்று தெரிய வருகிறது. மேலே ஆரண்ய காண்ட முடிவில் பெருமாள் சபரியின் ஆச்ரமத்தில் புகுந்து வினவுகையில் "கச்சித் தே குருசுச்ருஷா ஸபலா சாருபாஷிணி!" என்கிறார். இங்கு சாரு பாஷிணி என்கிற ஸம்போதனம் அவளுடைய பேச்சினிமையில் பெருமாள் மிக ஈடுபட்ட தைக் காட்டும். அந்த பேச்சினிமையைக் கொண்டே அவள் ஆசார்யசுச்ருஷையில் பழுத்தவள் என்பதையும் பெருமாள் தெரிந்துகொண்டார். அவள் விடை கூறுமிடத்தும் •சக்ஷுஷா தவ ஸௌம்யேந பூதாஸ்மி ரகுநந்தந, பாதமூலம் கமிஷ்யாமி யாநஹம் பர்யசாரிஷம்" என்று தான் ஆசார்யபாத ஸேவை பண்ணியிருந்ததைச் சொல்லியிருக்கையாலும் சபரி ஆசரித்த தருமம் இதுவே யென்னத் தட்டில்லை.

[ப்ராஸங்கிகமான ஒரு ஸந்தோஷ ஸூசனம் பண்ணுகின்.மேலெடுத்துக் காட்டிய*சக்ஷுஷா தவ ஸௌம்யேநேத்யாதிச்லோகத்தின் உத்தரார்த்தம் "கமிஷ்யம்யக்ஷயாந் லோகாந் த்வத்ப்ர ஸாதாத் அரிந்தம! என்று மாறியிருக்கிறது. பலபதிப்புகளிலும் இதுவே காண்கிறது. கோவிந்தராஜரும் மாறின பாடத்தையே வியாக்கியானத்திருக்கிறார் என்பது கண்டு வருந்தி யிருந்தோம். அந்த கோவிந்தராஜரும் "தர்ம சாரிணீம" என்கிற ப்ரக்ருதஸ்தலத்தில் "பாத மூலம் கமிஷ்யாமி யாநஹம் பர்யசாரிஷம் இதி வக்ஷ்யமாணத்வாத்" என்றெழுதியிருப்பதால் பரமஸந்தோஷ மடைந்தோம்]

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.